KNOW THY SELF

மகாஜனன்

வெள்ளி விழா மலர்

1989 - 2014

25th ANNIVERSARY

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA


HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife /Future Realty Inc.,
Brokerage, Independently Owned And Operated
I'm your REALTOR.
Welcome Home.
Suresh
Thanapalasingam
Cell: 416.859.0793
sthana@buysellurhome.ca
www.buysellurhome.ca
Bus: 905.201.9977
205-7 Eastvale Dr., Markham Ont. L3S 4N8 Fax: 905.201.9229

மகாஜனன்

வெள்ளி விழா மலர்

1989 - 2014

25th ANNIVERSARY

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA



O CANADA

O Canada! Our home and native land

True patriot love in all thy sons command.

With glowing hearts we see thee rise

The true north, strong and free

From far and wide, O Canada

We stand on guard for thee.

God keep our land glorious and free

O Canada! We stand on guard for thee

O Canada! We stand on guard for thee.



கல்லூரிக் கீதம்

(ஜன கண மன... என்ற மெட்டு)
ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப்பா புகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம்பணி நினைவோம்


வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரையுடையோம்
உனை நீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா.

தொல்புரம் புலவர் நா. சிவபாதசுந்தரனார்



பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை



கவிஞர் கா. சின்னப்பா



மகாஜன சிற்பி தெ.து.ஜெயரத்தினம்


OUR FOUNDER MEMBERS





OUR PATRONS & PAST PRESIDENTS


Mr. M. Karthigesu


Mr. E.Sivasothi


Dr. Shun K Sunder



Mr. P. Kanagasabapathy


Mr.S. Subramaniam


Mr. V. Ranjan



Mr. Kathir Thuraisingam


Mr. T. Iswarah Kumar


Mr.N.Jeganathan


Mr. V. Nantheeswarar


Mr. R. Ravindran


Mr. N Santhinathan


Mr. K. Jeyandran

25th ANNIVERSARY

மலர் குழு

மலர் ஆசிரியர்

திரு. குரு அரவிந்தன்

இணைப்பாளர்

திரு.க.முத்துலிங்கம்

குழுவினர்

திரு. க. ஜெயேந்திரன்

திரு. சிவ கௌரிபாலன்

திரு. வி. கணேசலிங்கம்

திரு. மு. சிவகுமாரன்

மகாஜனன்

வெள்ளி விழா மலர்

இன்று எமது சங்கம் வெள்ளிவிழா கொண்டாடுவதை எண்ணிப் பழைய மாணவர்களாகிய நாங்கள் மிகவும் பெருமைப் படுகின்றோம். 25 ஆண்டுகளுக்கு முன் மிகத் துணிச்சலோடு புலம் பெயர்ந்த இந்த மண்ணில் எமது சங்கத்தை ஆரம்பித்தவர்கள், அதைத் தொடர்ந்து இச்சங்கத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்தவர்கள் எல்லோருக்கும் எனது முதற்கண் பாராட்டுக்கள். அந்த வகையில் கடந்த இருபத்தைந்து வருடகாலப் பகுதிக்கான எமது செயற்பாடுகளை, ஆவணப்படுத்தலாம் என்ற நல்ல நோக்கத்தோடு எமக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களையும், ஆவணங்களையும் கொண்டு, கடந்தகால தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் நிர்வாகசபை அங்கத்தவர்கள், சங்கக் காப்பாளர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் உதவியுடன் எம்மால் முடிந்த அளவு தகவல்களைத் திரட்டி இந்த மலரில் ஆவணப் படுத்தி இருக்கின்றோம். எல்லாவகையிலும் எம்மோடு ஒத்துழைத்த இவர்களுக்கும், விளம்பரங்கள் மூலம் நிதி உதவி தந்தவர்களுக்கும், மலரை அச்சேற்றித் தந்தவர்களுக்கும், மலர் சிறப்பாக அமைய அயராது பாடுபட்ட மலர்க்குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

கனடாவாழ் மகாஜனன்கள் தம் கல்லூரி மீது கொண்டிருக்கும் பற்றுக்கோடு, நன்றி உணர்வு, பெருமதிப்பு, ஒற்றுமை உணர்வு, தோழமை உணர்வு, ஆகியன வலுவடையும் வண்ணம் கல்வி, கலாச்சார நிகழ்ச்சிகள், ஒன்று கூடல்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை இந்த மண்ணில் ஏற்பாடு செய்து செயற்படுத்தி வருகின்றார்கள். கல்லூரியின் பாரம்பரியங்கள், கல்வித்துறையில் அதன் மாண்புமிகு இலட்சியங்கள், என்பன நிறையுறும் வண்ணம் அவற்றை நடைமுறைப்படுத்தியும், கல்லூரியின் கல்வி, கட்டட புனருத்தாரண பணிகளுக்கு இயன்றளவு நிதியினைத் திரட்டிக் கொடுத்தும், மகாஜனாவின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய மகாஜனன்களையும், கல்வி, சமய, கலாச்சாரத்துறையில் மேம்பாடும், கீர்த்தியும் பெற்ற புகழ்மிகு மகாஜனன்களை அவ்வப்போது கௌரவித்தும், கனடாவின் பல்கலாச்சார சமூக பொருளாதார அரசியல் வாழ்க்கையில் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவது போற்றத்தக்கது. இதுபோன்ற அடிப்படை நோக்கங்களைக் குறிக்கோளாகக் கொண்டே இச்சங்கம் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நோக்கங்கள் எல்லாம் இன்று வியப்புறுவண்ணம் ஒவ்வொன்றாக நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. மகாஜனன் - 2014 வெள்ளிவிழா மலராக, கடந்தகால செயற்பாடுகளின், சாதனைகளின் நினைவுகளைத் தாங்கி இன்று வெளிவருகின்றது. இதோ உள்ளே இடம் பெற்ற ஆக்கங்கள் மட்டுமல்ல புகைப்படங்களும் உங்களுக்குக் கடந்தகாலக் கதைகள் சொல்லத் தயாராக இருக்கின்றன. வெள்ளி விழா வாழ்த்துக்களுடன், மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,
குரு அரவிந்தன்
மலராசிரியர்.


RE/MAX
Remax Vision Realty Inc.
Brokerage.
Independently Owned and Operated
416-321-2228
உங்கள் கனவை
நிஜமாக்கிட...
Suresh and Team .com
Shan Rabindranathan*
416.543.3390
Suresh Sellathurai*
416.844.5626
Thushi Thurairajah*
416.735.5292
* Sale representative
*Not intended to solicit properties already listed for sale or buyers under buyer agency agreement

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)



தலைவரிடமிருந்து

1989 ஆண்டு, மகாஜன அன்னையின் மைந்தர்களின் எண்ணக் கருவில் உருவாகி இன்று பெரும் விருட்சமாக கனடாவில் உயர்ந்து நிற்கிறது மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா. இந்த சங்கமானது பத்து தலைவர்கள், காப்பாளர்கள் மற்றும் பலநூறு மகாஜனன்களின் தன்னலமற்ற பங்களிப்பினால் இன்று 25 வருடங்களையும் கடந்து உயர்ந்து, வளர்ந்து இறுமாப்புடன் நிமிர்ந்து நிற்கிறது. அவர்கள் வழிவந்த நான் வெள்ளி விழா ஆண்டில் தலைவராக இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் கனடா, அமெரிக்கா வாழ் அனைத்து மகாஜனன்களுக்கும் வெள்ளி விழா ஆண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் எமது சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகள் அனைத்தும் புதுப் பொலிவுடன், எம் இனத்தின் கலை கலாச்சார விழுமியங்களுக்கு அமைய தற்போதய காலத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு இந்த வெள்ளி விழா ஆண்டில் உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகிறது. மகாஜனன் போட்டி (தமிழ், கணித, பொதுஅறிவு), மகாஜனன் பாட்டுப் போட்டி, இளையோருக்கான பயிற்சிப்பட்டறை, கோவில் திருவிழா, வருடாந்த ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும் என பல நிகழ்வுகளை உங்களுக்கு தந்த எமது செயற்குழு, வெள்ளி விழாவைச் சிறப்பிக்கும் பொருட்டு மகாஜனன் விருது விழா, முத்தமிழ் விழா, மகாஜனன் மலர் வெளியீடு மற்றும் எம் தலைவர்கள் காப்பாளர்கள் கௌரவம் என பல்வேறு அம்சங்களுடன் கூடிய வெள்ளி விழாவை இருநாட்களில் மகாஜனன்கள் அனைவரும் இணைந்து கொண்டாடுகிறோம்.

எமது சங்கமானது தொடர்ந்து மகாஜனக் கல்லூரியின் கல்வி, விளையாட்டு மற்றும் கலை இலக்கிய வளர்ச்சிக்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதுடன் எம்மால் 28 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கிய கணனி கூடத்தின் பராமரிப்பு, மற்றும் வருடந்தோறும் வறுமை நிலையில் உள்ள பத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்கும்.

கனடா பழைய மாணவர் சங்கமானது கடந்த 25 வருடங்களாக பல மகாஜனன்களின் வழித்தோன்றல்களின் பங்களிப்புடன் இயங்கி வருவது அனைவரும் அறிந்ததே. அவர்களை எமது செயற்பாடுகள் அனைத்திலும் உள்வாங்கி, இளைய சமுதாயத்தின் நற்திறன்களையும் அவர்களுள் ஒளிந்திருக்கும் புதிய சிந்தனைகளையும் மகாஜன சமுதாயத்திற்கு பிரயோசனமாக பயன்படுத்த அடுத்து வரும் செயற்குழுக்கள் தேவையான ஏற்பாடுகளை செய்யும்.

இந்த வேளையில் 25 வருடங்களில் செயலாற்றிய காப்பாளர்கள், தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மகாஜனன்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவின் சார்பில் மனமார்ந்த நன்றி.

"எமது பணி தொடரும்"
வெல்லுக மகாஜன மாதா

க.ஜெயேந்திரன்
தலைவர்


KIA
torontokia.com
We sell
new or used Kia vehicles
used Honda
Acura vehicles
KIA
K. Akilan
Cell: 647-865-4643
416-421-9000 Ext:415
akilan.kanagaratnam@torontokia.com
2222 Danforth Ave., Toronto, ON

யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
J/Mahajana College Tellippalai

T.P 021 3214004
021 2223981

E.Mail :- jayamahajana2010@gmail.com
jeyamahajana2010@yahoo.com



20/08/2014

கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

பாவலர் துரையப்பாபிள்ளை இலங்கை வாழ் தமிழருக்காகத் தந்த அருட்கொடை நம் மகாஜனக் கல்லூரியில் கலை கலாசாரம் பண்பாடு விளையாட்டு என்பவற்றோடு கல்வியையும் மகாஜனாவிடம் பெற்று உயர்ந்தோர் பலர் அவர்களில் என்றென்றும் மகாஜன மாதாவை மறவோம் என்று மகாஜன அன்னைக்கு இன்றும் பணி புரிவோர் போற்றத் தக்க மகாஜனன்கள் ஆவார். அந்த வகையில் நமது கனடா பழைய மாணவர் சங்கத்தினரும் போற்றுதற்குரியோராவர்.

எமது மகாஜனக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கம் தனது 25 ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி வெளியீடு செய்கின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் யா/மகாஜனக் கல்லூரியின் முதல்வர் என்ற வகையில் பெருமிதம் அடைகின்றேன்.

1989ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தனது வெற்றிப்பாதையில் காலூன்றி இன்று 25 ஆவது வருட நிறைவு தினத்தை கொண்டாடிக் கொண்டிருப்பதில் அனைத்து மகாஜனன்களும் மன மகிழ்ச்சி அடைகின்றனர்.

கனடா பழைய மாணவ சங்கத்தினர் எமது பாடசாலையின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் மற்றும் கல்வி விருத்தியிலும் முனைப்புடனும் ஆர்வத்துடனும் பங்கெடுத்து வருகின்றனர். குறிப்பாக ஆண்டு தோறும் நடக்கின்ற பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற்கான நிதியை வழங்கும் இவ்வமைப்பு பாடசாலைக் கணனிச் செயற்பாட்டிலும் அதிகூடிய அக்கறை செலுத்தி அதற்குரிய செலவினையும் வழங்கி வருகின்றது. அத்துடன் பாடசாலையின் சகல செயற்பாட்டிலும் மற்றும் ஆசிரியர் மாணவர் வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்ட இச்சங்கம் பாவலர் வளர்த்த இக்கல்லூரியை வெளிநாட்டில் இருந்த வண்ணம் விழுதுகளாய்த் தாங்கி நிற்கின்றது.

இவ்வாறு பல வழிகளிலும் எமது கல்லூரிக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் கனடா பழைய மாணவர் சங்கம் தொடர்ந்தும் வேரூன்றி நிலைபெற்று தன் பணியைத் தொடர எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டுவதுடன் இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


VERICO
MORTGAGE BROKERS NETWORK



MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
Tellippalai - தெல்லிப்பழை



Thank you for your kind invitation. It is great pleasure to give a wishing message, on behalf of the Old Student Association of Mahajana College Tellippalai, for Silver Jubilee Malar of OSA Canada. Our heartiest congratulations to all Mahajanans of Canada in this Silver Jubilee Celebration. It is a big mile stone in the history of OSA Canada to have such a wonderful year. We take this opportunity of expressing our tribute to all of you for the excellent support you have given us through this quarter of a century. Your contribution helps to maintain the wealth of innate power, talents, virtues and wisdom of mother of Mahajana. Your works have been marked by unsurpassed efficiency and excellence. You have been an inspiration to us all. We look forward to many more years of your respectable contribution to Mahanjana. We wish you every success with the Silver Jubilee and its follow-up.

வெல்லுக மகாஜன மாதா!!

Join Secretary
N.Sivakaran, R.Pirathapasarma
Old Students Association
Mahajana College
Tellippalai



உங்கள் சட்டப் பிரச்சினைகள் எதுவாயினும் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

Real Estate - Purchase, Sale, Mortgage
காணி, நிலம், வீடு வாங்குதல், விற்றல், அடமானம் வைத்தல்

Family Law - Divorce, Separation
குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு

Business - Purchase, Sale, Incorporation
வர்த்தக ஸ்தாபனம் கொள்முதல், விற்பனை

Immigration - Refuge Matters, Sponsorship, Appeal
குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன்முறையீடு

Power of attorney - Affidavits, Statutory Declarations, Last Will
தத்துவப் பத்திரம் சத்தியக்கடுதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்.

தி. ஜெகதீசன்
Barrister, Solicitor and Notary Public (ONTARIO)

Tel: Off: 416 - 266 - 6154 | Res: 416 - 449 - 0358 | Fax: 416 - 266 - 4677
2620 Eglinton Ave. E., # 201 Scarborough, On., M1K 2S3

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
Colombo - கொழும்பு



எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வணங்கி, இன்றைய தினம் தனது வெள்ளி விழாவை வெகு விமரிசையாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக் கிளைக்கு கொழும்புப் பழையமாணவர் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வரலாற்றுத் தொன்மையுடைய எமது பாடசாலை காலங்காலமாக அங்கு கற்று வருகின்ற மாணவர்களின் திறமைகளினாலும் சாதனைகளினாலும் பெருமை அடைந்து வருகின்றமை கண்கூடு, எம்மை வளர்த்தெடுத்த மகாஜன மாதாவின் பெருமையை உலகறியச் செய்த அவளது புதல்வர்கள் கனடா, இலண்டன், அவுஸ்திரேலியா எனப் பரந்து பட்ட நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கின்றார்கள்.

அந்த வகையில் கனடா மகாஜன மைந்தர்கள் ஒருங்கிணைந்து ஏற்படுத்திய கனடா பழைய மாணவர் சங்கம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பாடசாலைக்கு வழங்கிய உதவிகள், திட்டங்கள், அனுசரணைகள் எண்ணிலடங்கா, பாடசாலையின் வளர்ச்சிக்காக, அதன் தேவையறிந்து செயற்பட்டுவரும் கனடாப் பழைய மாணவர் சங்கம் எதிர் வரும் காலங்களில் மிக்க வலுடன் தனது காத்திரமான பங்களிப்பினை நல்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இன்று தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடும் கனடா பழைய மாணவர் சங்கத்தின் பணிகளும் சேவைகளும் தொடர்ந்து செவ்வனே இடம்பெற இறையாசியை வேண்டுவதோடு, விழா சிறப்புற அமைய கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் அனைத்து உறுப்பினர் சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. செல்வக்கந்தன்
தலைவர்


No One Beat Us!
On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards &Promotions Ltd.
www.promarawards.com
One stop for all your promotional Ideas...
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
416-291 2344
Fax: 416-291 1231
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
Mahajana College, Tellippalai

Old Students Association - United Kingdom

பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம்

Proud to be a Mahajanan

Est. 1987



27-Aug-2014



திரு ஜெயந்திரன் கனகசபை
தலைவர்
மகாஜன பழைய மாணவர் சங்கம்
கனடா.

மதிப்பிற்குரிய திரு ஜெயந்திரன் அவர்களிற்கு,

கனடா மகாஜன பழைய மாணவர் சங்கத்தின் "வெள்ளி விழா கொண்டாட்டம்" நிகழ்வை மகிழ்சியோடு பாராட்டுவது மட்டுமல்லாது, தங்கள் சங்கம் மகாஜனக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கும், கனடா வாழ் மகாஜனன்களின் குடும்பங்கள் ஒன்றினைந்து மகிழ்ச்சியோடு தமது திறமைகளை வெளிகொணர்வதற்கு கடந்த 25 வருடங்களாக எடுக்கும் தங்கள் சகல முயற்சிகளுக்கும் எமது சங்கம் சார்பாக வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வருடம் எமது சங்க நிகழ்வுகள், "மகாஜன பூசை-2014" யுடன் ஆரம்பித்தது. தொடர்ந்து மகாஜனன்களின் குடும்பங்கள் ஒன்றிணையும் 25வது வருடாந்த ஒன்றுகூடல் "மகாஜன நாள்-2014" நிகழ்ந்தது. இந் நிகழ்வில் மெய் வல்லுனர், உதை பந்தாட்டம் மற்றும் வலை பந்தாட்ட போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளைத் தொடர்ந்து வெற்றி வீரர்களுக்கு பரிசளிப்பும் இரவு விருந்துபசாரமும் நடைபெற்றது. இவ்விழாவில் மகாஜனாவின் முன்னாள் பிரபல உதை பந்தாட்ட வீரர்களான திரு M தனேசனனும், முன்னாள் பிரபல வலை பந்தாட்ட வீராங்கனைகள் திருமதி விஜயலஸ்மி இராமநாதனும் செல்வி அங்கயற்கண்ணி செல்வராஜாவும் கௌரவிக்கப்பட்டார்கள்.

இலங்கைத் தீவில் மகாஜனக் கல்லூரி தொடர்ந்து உதை பந்தாட்டத்தில் சாதனைகள் படைத்தது போல் ஐக்கிய இராச்சியத்திலும் எமது இளம் சந்ததியினர் தொடர்ந்து பல சாதனைகள் படைத்து வருகிறார்கள். இவ்வருடம் இளம் மகாஜனன்கள் Kingston District Football League இல் தெரிவு செய்யப்பட்டுள்ளதை மிகவும் பெருமையுடன் அறியத்தருகிறேன். இவர்களின் தொடர்ந்த வெற்றிக்கு தொடர்ந்து அயராது உழைக்கும் மகாஜனாவின் முன்னாள் உதைபந்தாட்ட வீரர் திரு ப புவனேந்திராவை மிகவும் பாராட்டுகிறேன்.

இருபத்தொராம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்கின்ற நாம், இன்றைய காலத்தின் தேவை கருதி, புலமைமிகு மகாஜன மாணவ சமுதாயத்தை மீண்டும் உருவாக்குவதில் எமக்கு பாரிய கடமைப்பாடு உண்டு. எமது கல்லூரி கற்பித்தல் செயற்பாட்டை தொடர்ந்து முன்னேற்றுவதற்குப் பங்களிப்பது வசதி படைத்த புலம்பெயர் மகாஜன சமூகத்தின் கடமை என்ற சிந்தனையுடன் வாழ்த்தி புதிய நூற்றாண்டில் காலடியெடுத்து வைப்போமாக.

அ.விமலதாசன்
செயலாளர்

CELEBRATING 25 Years 1987-2012

உறவாலும் உணர்வாலும் ஒன்றிணைவோம்.

வெல்லுக மகாஜன மாதா.

MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION NSW and ACT (AUSTRALIA)

மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் சிட்னி – கன்பரா (அவுஸ்திரேலியா)



10 செப்ரெம்பர் 2014

வாழ்த்துச் செய்தி

கனடாவில் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 25 ஆண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு எமது சங்கத்தின் சார்பில் மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த விழாவிற்காக ஒரு மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மலர், எமது கல்லூரியின் சிறப்புக்களையும், பழைய மாணவர்களின் செய்திகள், சேவைகள், விபரங்களையும் கொண்டதாக அமைவது ஒரு சிறப்பு.

கடந்த 25 ஆண்டுகளாக கனடாவின் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பலவழிகளில் உதவிவருவதைக் கண்டு பெருமைப்படுகின்றேன். கல்வித்துறையிலும் கல்விசாராத் துறைகளிலும் எமது கல்லூரிக்குப் பல தேவைகள் இருப்பதை நாம் அறிவோம். எமது பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து, புதிதாக பதவியேற்றிருக்கும் அதிபர், திரு ம. மணிசேகரனின் வழிநடத்தலில் எமது கிராமத்துக் கல்விக் கூடத்தை மீண்டும் முன்னைய மிடுக்குடன் நிமிர வைப்பது எமது கடமை ஆகும்.

இருபத்தைந்தாண்டு விழா சிறப்புடன் அமைய மீண்டும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

இப்படிக்கு
டாக்டர். பொன் கேதீஸ்வரன்
தலைவர், சிட்னி-கன்பராக் கிளை

Address: 39 Llandilo Ave, Strathfield, NSW 2135, Australia; **E-mail:** nswmahajanans@gmail.com
Contact Numbers: President: +61-433 088 725; Secretary: +61-403 701 790; Treasurer: +61-405 167 993

மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்
Association des Anciens Eleves du College Mahajana - France
N° d'ordre 91/4241

PATRON:
Principal
Mahajana College
Tellippalai
e-mail:
jayamahajana2010@gmail.com

PRESIDENT:
Mr S.Hariharan
e-mail:
hari@ashwi.fr

VICE PRESIDENTS:
Mr U.Pararajasegaran
e-mail:
thilaparara@hotmail.fr
Mr S.Naguleswaran
e-mail:
nagulaes1956@gmail.fr

SECRETAIRES:
Mme Karunaivel Pathmayokini
e-mail:
k.nagalingam@wanadoo.fr
Mr N. Varatharajah
e-mail:
varatharajah.n@wanadoo.fr

TRESORIER:
Mr S.Sutharsan
e-mail:
jerusan62@hotmail.fr

MEMBRES DU COMITE:
Mr S.Radhakrishnan
e-mail: kurynchi@neuf.fr
Mr P. Nanthakumar
e-mail: dxnithers@live.fr
Mr S. Nanthakumar
e-mail: kannan1@hotmail.fr
Mr P.Vasuhan
e-mail: vpvasuhan@gmail.com
Mme Jeyakumar Leenaravi
e-mail:majkr@hotmail.com
Mme Thuraippah Leela
leelaruksshaan@hotmail.com
Me S.Thusyanthan
thushyrani@gmail.com
Mr S.Ithayamoorthy
Mr P.Yogarajah

21.09.2014

மகிழ்வுடன் வாழ்த்துகிறோம்.

25 வருடங்கள். சாதனையே. கல்லூரிக்கு அருகில் பழையமாணவர் சங்கம் இயல்பாக இயங்கும். நாடு கடந்து பல ஆயிரம் கிலோமீற்றர்களுக்கு அப்பால் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இயங்குவதென்பது சிரமமானது. 25 வருடங்களாக மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா கிளை கல்லூரிக்கான உதவிகளை வழங்குவதோடு, கனடாவில் வாழும் தமிழ் சிறுவர்கள், மாணவர்களுக்கான செயற்பாடுகளோடும், கலை நிகழ்வுகளோடும் இயங்குவதென்பது மிகமிகக் கடினமானது. ஒற்றுமையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

மேற்குலக நாடுகளில் நேரத்தினை ஒதுக்கி பொதுவான சமூக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மிகக் குறைவு. கல்வி தந்த கல்லூரியினை நினைத்து 25 வருடங்களுக்கு முன்பாக பழைய மாணவர் சங்கத்தை அமைத்த நல் உள்ளம் கொண்டவர்களை நினைக்கின்றோம். அன்று முதல் சிறப்பாக இயங்குவதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.


இருபத்தைந்து வருடங்கள் சிறப்பாக செயற்பட்டு இன்று கம்பீரமாக வெள்ளி விழா கொண்டாடி மகிழும் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா கிளைக்கு உளம் நிறைந்த வாழ்த்துக்கள். தொடரட்டும் உங்கள் சிறப்பான பணிகள்.

வெல்லுக மாஜன மாதா!

இணைச்செயலாளர்

A.A.E.C.M - P, 3 square Jodelet, 93420 Villepinte, France

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஜேர்மனி



வாழ்த்துகிறேன்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையினர் தமது கல்வி, சமூகப்பணி சார்ந்த செயல்பாடுகளில் இருபத்தைந்து ஆண்டுகால பயணத்தை முன்னிட்டு அதனை மகிழ்வு கொண்டு விழா எடுத்தும் மலர் வெளியிட்டும் செயல்பாடுகளின் ஆவணமாக்கல் என்ற திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதையறிந்து மகிழ்ச்சிப் பெருக்குடன் கனடா கிளையினரை பாராட்டி வாழ்த்துகிறோம்.

ஒரு கல்லூரியில் படித்துவிட்டு அக்கல்லூரியைப் பற்றியும் அதன் முன்னேற்றத்தைப் பற்றியும் கவலைப்படாது, அடுத்த கட்டமாக தொழில் வாழ்வு என்று போகாமல், தாங்கள் படித்த பாடசாலையே தமக்கு வாழ்வும் உயர்வும் தந்தது என்ற உள்ளுணர்வின் நிமிர்த்தம் அனைவரையும் ஒன்றுசேர்ந்து சிந்திக்க வைத்து புலம்பெயர்ந்து வந்தாலும் "உனை நீ அறி" என்று ஒருங்கிணைந்ததுதான் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களில் ஒன்றான கனடா கிளை.

ஏதோ பொழுது போகவில்லையென்றோ அல்லது கூடிக்கதைத்து தேநீர் குடித்துவிட்டுச் செல்வதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டதல்ல எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களின் கிளைகள்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும், அடுத்த தலைமுறையினரையும் இச்செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும், என்பதுடன் நின்றுவிடாது பன்முக போட்டிகள் போன்றவற்றை கனடா கிளையினர் முன்நின்று நடத்தி முன்னோடியாகச் செயல்படுவதை பார்த்து மகிழ்கிறோம்.

தனிமனிதனுக்கு பரம்பரை மரபணு இருப்பது போல எமது கல்லூரியில் படித்த மாணவர்கள் பெற்றோராகி அவர்களின் பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் என தொடர்கிறது வாழையடி வாழைச் செயல்பாடுகள்.

சம்பவங்களும், நிகழ்வுகளும் ஆவணமாக்கப்பட்டு வரலாறாக பதியப்படுகின்றது. புலம்பெயர் தமிழர் வரலாற்றின் கனடா பற்றிய பதிவில் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் - கனடா கிளையினரும் பதியப்படுவார்கள்.

அதே வேளை ஒரு சங்கத்தின் அங்கத்தவர்கள் இறுக்கமான மனநிலையைக் கொண்டிருக்காமல் நெகிழ்வான மகிழ்நிலையைக் கொண்டு மூத்தோர் ஆடல்பாடல் என கலகலப்பாக இருக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாகும்.

தொடரட்டும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையினரின் சமூகப் பணி


கந்தையா முருகதாசன்
காப்பாளர் - ஜேர்மனி

Quality Taste & Flavour of Thamil Eelam

BABU

Take-Out & Catering

www.babudelivery.ca



MARKHAM
9590 McCowan Rd. Unit 3-5
Markham, On. L3P 8M1
(McCowan & Bur Oak)

SCARBOROUGH
4800 Sheppard Ave.,#201-204
Scarborough, On. M1S 4N5
(McCowan & Sheppard)

Open : 5am to Midnight

Open Every Day
Except Nov 27

மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்
THE MAHAJANA COLLEGE FOUNDATION FOR EDUCATIONAL DEVELOPMENT
A Company Incorporated under the Companies Act of No 17 of 1982
Mailing Address: 19 -1/6, Station Court, Station Road, Colombo-06, Sri Lanka

Congratulations to Mahajana College Old Student Association, Canada on the occasion of its Silver Jubilee celebrations

It gives immense pleasure in sending the message on the occasion of silver jubilee celebrations of the Old Students Association, Canada. Your Association has been growing from strength to strength over the last twenty five years by providing a forum for the Mahajanan's in Canada and outstanding contribution to the development of Mahajana College.

In the past seven years of your journey, the Mahajana College Foundation for Educational Development has been able to embark on a life changing measures for the benefit of the students and staff of Mahajana College. Today Mahajana College stands proud with your contribution for the restoration of its dilapidated buildings, modern computer laboratory and many other facilities which are related to educational and sports related progression. The Foundation sincerely appreciates your contribution in all its efforts to improve the quality of education at Mahajana College.


The Mahajanan society has immensely benefited from your financial contribution towards the popular scholarship and bursary program together with your active participation and counseling in many other areas provided through the Foundation.

We are sure that there are many students whose lives have been enriched as a result of the high degree of professionalism and personal care that has always been the characteristic of the Old Students Association, Canada.

We take this opportunity to thank all office bearers, and Mahajanan society in Canada for your dedication in leading and building your Association over the past twenty five years. Your united efforts are no doubt been the force behind the Mahajana College Foundation for the development of Mahajana College.

On this occasion the Foundation is pleased to send our best wishes for successful and happy silver jubilee celebrations.

S.Jeyavarman
Chairman
The Mahajana College Foundation for Educational Development


MASALA
CAFE
Srilankan & South Indian Cuisine
Catering & Take-Out
ALWAYS ALWAYS ALWAYS ALWAYS ALWAYS
HOT &
FRESH
Call: (416)-665-2233
University Mall
59 Four Winds Dr Toronto M3J 1K7

MAHAJANAN'S
INVESTMENT GROUP

MIG GREETING MESSAGE

We are delighted to know that our Old Students Association's Silver Jubilee Celebrations will be held on the 5th & 11th of October, 2014. It is with great pleasure that we are sending our greetings for the Silver Jubilee Celebration. Our Board of Directors are honoured and excited to participate in this commemorative event.

The Silver Jubilee Celebration is a significant milestone of Old Students Association of Canada that has much meaning. When you are celebrating this milestone, also called a silver jubilee, there are many traditions and symbols associated with it. This celebration is filled with memories from the past as well as anticipation of the future of the association.

This is not only to socialize with Mahajanans but also to remember the foundation of our life, which was built during our Principal T.T.Jayaratnam's time at Mahajana College. The 25 years in our association consists full of pleasant and memorable episodes with our teachers and our college mates. We tend to recollect about the past when we all meet at this function.

Today, we, as Mahajana old students are in a better position than we were before, and we must contribute to our College. We are certain that two day celebrations of our Association's Silver Jubilee will reinforce our spirit of unity to bring our Association to greater heights.

Board of Directors
Mahajanans Investment Group

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)



The Preamble in the Constitution of the
Tellippalai Mahajana College O.S.A., Canada

Thanks to the Almighty, I am still surviving to Congratulate and bless you, all, the Members of the Mahajana College O.S.A, Canada, on this occasion of the Silver Jubilee Celebrations of our Association. "Any work well begun is half done" is an age-old adage. Accordingly, in1989, the Constitution of our Association with its Preamble was drafted and adopted unanimously. Our Association can proudly acclaim that it has successfully lived up to the ideals it has proclaimed in its Preamble.

In the corridors of political parlance, it is said that the activities of any Association, social economic, political, ethical lead to its respective Preamble. Therefore, it is very opportune now, for us to present below the Preamble of our Constitution to be read and to be actively followed by the future generations of Mahajanans over the years to come.

Preamble

Whereas the past students of Mahajana College, Tellippalai, Sri Lanka, presently in residence in Canada are desirous of forming an Association with the avowed purpose of fostering, promoting and sustaining a sense of unity, friendship, co-operation and personal camaraderie among themselves as old Mahajanans,

And whereas they are also equally desirous of rendering such assistance as their Alma-Mater may need from time to time in all its future development and rehabilitation programs,


And whereas it has been generally felt that for the pursuance and realization of these objectives, an Association be formed,

Know Ye All that the Constitution set-forth is being adopted at the Inaugural Meeting of the Founding Members of the Association held in the year 1989 in Toronto, Canada.

M.Karthigesu

Patron

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)



I am very proud to be a Mahajanan. I am honored to be a member of OSA from its inception. OSA has served our Institution in the most difficult and tumultuous era. Our challenging period is next several years. The future of Mahajana depends in on us. We had the best education, best dedicated teachers and principals. Above all we were privileged to know the founding family and their noble intentions still standing tall after one hundred years. OSA must pay tribute to these great selfless visionaries by making this Institution return to glorious past.

I want to congratulate OSA of Mahajana on this grand occasion for the tasks well done for the last twenty five years.my best wishes for all the monumental efforts OSA is about to undertake in the future .

Dr. S. K Sunder
Lancaster, California
Patron.


NEW
HOPPER HUT
Dine In - Takeout - Catering
Tel: 416-299-4311
www.newhopperhut.com
880 Ellesmere Rd, Scarborough, ON M1P 2W6


GT Brokers
Protect You & Your Family
www.gtbrokers.ca
Aim for a high quality of life
with the support of a professional
Confidence!
• Super Visa, Travel & Visitors Insurance
• No Medical Exam Life Insurance
• Permanent/Term Life Insurance
• Disability Income Insurance
• Critical Illness Insurance
• Mortgage Insurance
• Long Term Care Benefit
• Business Succession Plan
• Buy/sell Agreement
• Group Benefit Plan
• Estate Planning
• RRSP/TFSA and RESP
Guna Thuraisingham
Financial Advisor
416 528 1407
guna@gtbrokers.ca
INDUSTRIAL ALLIANCE
Manulife
Assomption Vie Assumption Life
Foresters
RBC Royal Bank

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)



மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழாவினை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்ற மன நிலையில் உள்ள உங்களுக்கும் உங்கள் நிர்வாகசபையினருக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும்.

எந்த நோக்கத்துடன் இந்தச் சங்கம் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப் பட்டதோ அந்த நோக்கத்தினை இது நாள் வரை சிறப்புற நிறைவேற்றி வந்துள்ளது. ஆரம்பகாலம் முதல் இன்றுவரை அவ்வக் காலத்திற்கான நிர்வாக சபை உறுப்பினர் வெகு ஆவலோடும் அர்ப்பணிப்போடும் செயற்பட்டு வந்தமையால் தான் பெறுபேறுகள் பாராட்டக் கூடிய வகையில் அமைந்தன.

வெறுமனே பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆக்கபூர்வமான உதவியை நல்கியதோடு மாத்திரமல்லாமல் அங்கே அல்லல் படும் அகதி நிலையில் உள்ளோருக்கும் உதவ இச்சங்கம் தொடக்கம் முதலே ஆர்வம் காட்டியமை பாராட்டுக்குரியது.

கனடாவில் வாழ்கின்ற இளைய தலைமுறையினருக்கும் உதவ வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் கணித,பொது அறிவு மற்றும் தமிழ் அறிவுப் போட்டிகள் நடத்தி இத்தலைமுறையினரை ஊக்குவித்த பெருமைக்குரியதும் பல்லோரது பாராட்டுக்களையும் பெற்றதுமான எமது பழைய மாணவர் சங்கம், இவ்வருடம் கலைத் துறையிலும் கால் பதித்துள்ளமை பாராட்டுக்குரியது. இங்கு வாழ்கின்ற இளைய தலைமுறையினருக்கான இசைப் போட்டியை நடத்தியதுடன் அவர்களுக்கான பட்டறையும் நிகழ்த்தி ஊக்குவித்தமை பாராட்டுக்குரியது. ஏனைய பாடசாலைகளுக்கும் முன்னோடியாக அமைந்தது.

எமது பழைய மாணவர் சங்கம் தொடர்ந்து தனது கல்லூரிக்கு மாத்திரமல்லாமல் இங்கு வாழ்கின்ற இளைய தலைமுறையினரின் சீரிய வாழ்விற்காக உதவவேண்டும் என வாழ்த்துகிறேன்.

வாழ்க மகாஜனா

அன்புடன்.
பொ.கனகசபாபதி
சர்வதேச இணைப்பாளர்
முன்னாள் தலைவர்

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

(Registered as a non profit organization in Canada, No:001100556)



எமது சங்கம் 25 வதுஆண்டில் காலடி எடுத்து வைக்கும் போது எனது மனம் சிறிது பின் நோக்கி சங்கத்தின் ஆரம்ப காலத்தைப் பற்றி சிந்திக்க விளைகிறது. இம் மலரில் மலரும் அறிக்கைகள், கட்டுரைகள் மூலம் நாம் செய்து முடித்த, செய்து கொண்டிருக்கும், இனிசெய்யப் போகும் சாதனைகள் பற்றித் தெரியப்படுத்தி இருப்பதைப் பார்க்க முடியும். ஆகையால் இச்சங்கத்தை ஆரம்பித்த காலத்தில் முக்கிய பங்களித்தவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் சங்கத்தின் ஆரம்பகால வளர்ச்சிபற்றிக் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன்.

நாம் இந்தச் சங்கத்தைஆரம்பித்த 1989 ம் ஆண்டு காலகட்டத்தில் தாய் நாட்டில் உள்ள ஒரு பாடசாலைக்கு வேறு ஒரு மேலைத் தேசநாட்டில் பழைய மாணவர் சங்கம் அமைப்பது என்பது நாம் கற்பனை பண்ணிப் பார்க்கக் கூடிய விடயமாகக் கூட இருக்கவில்லை. ஆனால் பலரது ஒத்துழைப்பும், ஆதரவும் இருந்த காரணத்தால் பல பிரச்சனைகளையும் தடங்கல்களையும் தாண்டி பெரிய அளவில் ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வப் போது தொய்வுகள் ஏற்பட்டாலும் அதை எல்லாம் தாண்டி எமது சங்கம் இன்று பெருவளர்ச்சி அடைந்திருக்கிறது. பல விடையங்களில் குறிப்பாக கோயில் திருவிழா, கலைவிழா, பூங்கா ஒன்றுகூடல், விளையாட்டுப்போட்டி, சிறுவர்களுக்கான அறிவுப்போட்டி, பயிற்சிப் பட்டறை என்று எமது சங்கம் முன்னோடியாக விளங்குகின்றது. எமது சங்கத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு இளைய தலை முறைக்கான தமிழ் அறிவுப் போட்டியையும், பாட்டுப் போட்டியையும் வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் 1998 ஆம் ஆண்டு மகாஜனன் மலரில் எனது தலைமைக் கட்டுரையில் நான் குறிப்பிட்ட ஒரு பந்தியை நினைவு படுத்துவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன். அதாவது "தற்போது இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் பழைய மாணவர்களைத் தவிர வேறு எவரும் பெரிதாக வந்து சேரவாய்ப் பில்லை. ஆதலால் எமது சங்கத்தின் ஈடுபாடு குறைவதற்கு வாய்ப்புண்டு. இதனால் எமது சங்கத்தின் செயற்பாடுகளில் தொய்வு நிலை ஏற்படலாம். எமது அடுத்த சந்ததியினரையும் சங்கத்தில் ஈடுபடப் பல முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம். ஆனால் அதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்."

ஆனால் இப்போது எமது சங்கத்தின் வளர்ச்சியைப் பார்க்கும் போது, நாம் சரியான திசையில் தான் போய்க் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கத் தோன்றுகின்றது. இதற்கெல்லாம் தொடர்ச்சியாக இயங்கிவரும் எமது சங்கத்தின் நிர்வாக சபைகளே காரணமாகும். சங்கத்தின் பொறுப்பை இளம் சந்ததியினரிடம் ஒப்படைத்து விட்டு நாங்கள் வெளியே ஒதுங்கி நின்று ஆதரவு தருவதும் ஒருகாரணமாக இருக்கலாம்.

எமதுசங்கத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இதுவரை இருந்தவர்களையும், இனிவரப் போகிறவரகளையும் மனதாரப் பாராட்டி இம் முயற்சிதொடர்ந்தும் மேன்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகின்றேன்.

செல்வா சுப்ரமணியம்
காப்பாளர்
முன்னாள் தலைவர்

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)



எமது மகாஜனா பழைய மாணவர் சங்கம் 25 ஆண்டுகள் சாதனைகளுடன் தொடர்வது மகிழ்ச்சியைத் தருகின்றது. பள்ளிமாணவர்களாக சிறுவயதில் பழகியவர்கள் நாங்கள். எங்களில் பலர் தாயகத்தில் நடந்த போரினால் இங்கே புலம் பெயரும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம். அதனால் நாம் இங்கு நிரந்தரமாகக் குடியேறியவர்கள் ஆகியுள்ளோம்.

புலம் பெயர்ந்த இந்த நாட்டில் எம்மவர்கள் என்று உறவாட ஒரு சிலரே உள்ளோம். மகாஜனா என்ற குடை எங்களை இங்கே ஒன்று கூட்டியது. பழைய நட்புகள் மீண்டும் புத்துயிர் பெற்றன. ஆரம்பத்தில் நிராதரவான நிலையில் தேவை அதிகம் இருந்த வேளையில் எமக்குக் கைகொடுத்தவர்கள் எமக்கு முன்பே இங்கு வந்திருந்த மகாஜனா நண்பர்கள்தான். இந்தத் தொடர்பை ஏற்படுத்தித் தந்தது எமது பழைய மாணவர் சங்கம்தான்.

கனடாவில் இயங்கும் மற்றய பொதுநல சங்கங்கள் மெச்சும் வகையில் எமது சங்கம் திறம்பட இயங்கி முன் உதாரணமாகத் திகழ்கின்றது. 1999 ஆம் ஆண்டு முதல் இரண்டு வருடகாலம் அதன் தலைமை பொறுப்பை ஏற்று செயற்படும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இக்கால கட்டத்தில் அவுஸ்ரேலியாவில் இருந்து வருகை தந்த முன்னாள் ஆசிரியர் திரு. தியாகராஜா அவர்களை இரவு விருந்து கொடுத்துக் கௌரவிக்க எமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. இது எனக்கு மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய நல்ல அனுபவம். றிச்மண்ட் இந்து ஆலய வருடாந்த திருவிழா, முத்தமிழ்விழா, பூங்கா ஒன்றுகூடல், இராபோசனவிருந்து, மகாஜனன் மலர் - 2000 வெளியீடு ஆகியன எமது வழமையான செயற்பாடுகளாக இந்தக் காலப்பகுதியில் நடைபெற உதவிய அத்தனை மகாஜனன்களையும் இவ்வேளையில் நினைவு கூர்வது என் கடமையாகும்.

தொடர்ந்தும் எமது சங்கம் ஒற்றுமையாகவும், சிறப்பாகவும் செயற்பட வேண்டும், இளைய சந்ததியினர் சங்கத்தில் இணைந்து அதைத் தொடர்ந்தும் வெற்றிகரமாக நடத்தி பொன்விழா, பவளவிழா காண உழைக்க வேண்டும். இதற்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன். எமது சங்கத்தின் வெள்ளிவிழா சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெல்லுக மகாஜன மாதா

வை.இரஞ்சன்
காப்பாளர்.
முன்னாள் தலைவர்

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

(Registered as a non profit organization in Canada, No:001100556)



இருபத்து நான்கு ஆண்டுகள் நிறைவு செய்து இருபத்தைந்தாவது ஆண்டில் சிறப்பாக இயங்கி வெள்ளி விழா கொண்டாடிக் கொண்டிருக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா அமைப்பின் ஸ்தாபகர்களுள் நானும் ஒருவன் என்பது பெருமையாக இருக்கிறது. பின்னர் தலைவராகப் பணியாற்றியதும், தற்போது காப்பாளராக இருப்பதுவும் மகிழ்வைத் தருகிறது.

இந்த வேளையில் 25 ஆண்டுகள் தொடர்ந்து சிறப்பாக சங்கம் செயற்பட தன்னார்வத் தொண்டர்களாக உழைத்த, உழைத்துக்கொண்டிருக்கும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் உளமார பாராட்டுகிறேன்.

ஆரம்பித்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எங்கள் பழைய மாணவர் சங்கம் - கனடா தொடர்ந்தும் சிறப்புடன் செயற்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கதிர் துரைசிங்கம்
காப்பாளர்.
முன்னாள் தலைவர்

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

(Registered as a non profit organization in Canada, No:001100556)



மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாக் கிளையின் வெள்ளி விழாவை முன்னிட்டு சிறப்புடன் வெளிவரும் மகாஜனன் மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நிர்வாகசபை அங்கத்தவராக, பொருளாளராக, செயலாளராக, தலைவராக மட்டுமல்ல இன்று இச் சங்கத்தின் காப்பாளராகவும் கடமையாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததையிட்டும், 25 வருட காலத்தை எமது சங்கம் வெற்றிகரமாகக் கடந்ததை எண்ணியும் நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

அடுத்த தலைமுறையினர் சங்கத்தின் செயற்பாடுகளில் மிகவும் தீவிரமாகப் பங்கு கொள்வது வரவேற்கத்தக்கது. அவர்களையும் எமது சங்கத்தில் இணைக்க வேண்டும் என்று கடந்த காலங்களில் நாங்கள் வகுத்த திட்டம் இன்று பலன் தரத் தொடங்கியிருக்கின்றது. எமது கல்லூரிக்கு நாங்கள் எப்படி எல்லாம் இந்த மண்ணில் இருந்து உதவிகளை வழங்கினோமோ அதே போல அவர்களும் கல்லூரி மீது கொண்ட ஈடுபாடு காரணமாகக் கல்லூரிக்கு உதவுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். எமது கல்லூரியில் உள்ள திறமைத் தேர்ச்சி பெற்ற வசதி குறைந்த மாணவர்களுக்கு இந்த மண்ணில் இருந்து புலமைப் பரிசுகளைக் கொடுப்பதற்கு இவர்களில் சிலர் இன்று முன் வந்திருப்பதே பாராட்டுக்குரியது.

கனடா பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சிக்கு இதுவரை காரணமாக இருந்தவர்களையும், எதிர் காலத்தில் இச்சங்கத்தைத் திறம்பட நடத்தப் போகிறவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டி வாழ்த்துகின்றேன். எமது சங்கம் மேன்மேலும் வளர்ச்சி பெற்று சிறப்புடன் விழங்க, வெள்ளி விழாக் கொண்டாடும் இந்நாளில் வாழ்த்தி வணங்குகின்றேன்.

தெ. ஈஸ்வரகுமார்
காப்பாளர்
முன்னாள் தலைவர்.

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)



ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிப்பது இலகுவானதாக இருக்கும், ஆனால் அதை வளர்த்து வரலாற்றில் இடம்பெறும் அமைப்பாக வளர்த்தெடுப்பது மிகவும் கடினம். எமது பழைய மாணவர் சங்கம் இன்று வெள்ளி விழா காண்கிறதென்றால், அதனை இந்நாள் வரை வளர்த்து வந்தவர்களுக்கு நன்றி கூறவேண்டியது எமது கடமையாகும். இந்தச் சங்கத்தில் ஒருவனாக இருப்பது பெறும்பேறாக கருதுகிறேன். இச் சங்கத்தை தலைமை தாங்கி முன்னெடுத்தவர்களில் நானும் ஒருவன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை வலிமையாக தாங்கிய விழுதுகள் பல, அவர்களின் தொண்டுகளை நாம் பாராட்ட வேண்டும். அத்துடன் வருங்காலத்தில் எமது சங்கத்தை புதிய விழுதுகள் தாங்கி இன்னும் வலிமையுடன் வளரச் செய்ய வேண்டும். இன்னும் பல்லாண்டுகள் இச்சங்கம் வாழையடி வாழையாக வளர வாழ்த்துகிறேன்.

வாழ்க மகாஜனா

திரு. ந. ஜெகநாதன்
காப்பாளர்.
முன்னாள் தலைவர்

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)



Our College motto "Know thy self", which is something that has become ingrained within us and influence our lives and work. The meaning and sustenance behind this resounding phrase motivate us to constantly reflect upon our lives, principles and goals. We are the firm believers that unless we begin to know who we are, the likelihood for personal or professional success is minimal.

Our Old Student Association was formed in 1989 in Canada. The Silver Jubilee Celebration is an important event in the history of our Old Student Association. While Silver Jubilee of the Association denotes the attainment of a certain strength, vigor and maturity, it also brings into focus the background against which the institution had been born.

I am proud to say that I was privileged to enjoy 22 years of blissful period in Mahajana College Old Students Association Canada. This celebration marks the reunion of our founders, past presidents, past committee members, former teachers, organizers and volunteers of all OSA's events for the last 25 years.

It is with great pleasure that I convey herewith my warm greeting and wishes to all Mahajanans and their families on the occasion of its Silver Jubilee Celebration. May this jubilee celebration be to the enchantment of all those present and to the glory of the loving Alma Mater.

V.Nantheeswarar.
Patron
Former President

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)



25 ஆம் ஆண்டை நிறைவு செய்யும் கனடா மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு சென்ற நாளையும் மகிழ்ச்சி ததும்பும், நினைவாகவும் ஒவ்வொரு வருகின்ற நாளையும் நம்பிக்கையூட்டும் தொலை நோக்காகவும் ஆக்குவதற்கு அத்திவாரமிடுவது நாம் கற்ற கல்லூரி. அக் கல்லூரிக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். அதை என்றும் மறக்காது நாம் புலம்பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர் சங்கக் கிளைகளை நிறுவி வருகின்றோம். அதன் மூலம் பல்வேறு உதவிகளை எமது கல்லூரிக்கு அளித்து கல்லூரியின் முன்னேற்றத்திற்கு எம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகின்றோம்.

இந்த வகையில், என்னை ஆளாக்கிய மகாஜன அன்னையின் நினைவாகக் கனடாவில் பழைய மாணவர் சங்கத்தை நாம் ஸ்தாபித்தபொழுது அதன் ஸ்தாபக அங்கத்தவர்களில் நானும் ஒருவன் என்பதிலும், தொடர்ந்து நிர்வாக சபையில் கடமையாற்றி கல்லூரியின் நூற்றாண்டுகால நிகழ்வின்போது தலைவராகப் பணியாற்றியதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சங்கத்தின் வளர்ச்சியில் என்றும் எனது பங்களிப்பு இருக்கும். அத்துடன் அனைத்து மகாஜனன்களையும் சங்கத்தில் ஒன்றிணைந்து பணியாற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். மேலும், இங்குள்ள மாணவர்களுக்குப் பயனளிக்கும் விதமாகப் போட்டிகள், நிகழ்ச்சிகள், விளையாட்டுப் பயிற்சிகளை நடத்த உதவியதுடன் சங்கத்தின் முன்னேற்றத்திற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் எடுத்து கடுமையாக உழைத்த அனைத்து பழைய மாணவர், அவர்தம் குடும்பத்தினர், வழித்தோன்றல்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வெல்லுக மகாஜன மாதா

வளர்க கனடா பழைய மாணவர் சங்கம்

இ. இரவீந்திரன்
முன்னாள் தலைவர்

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

(Registered as a non profit organization in Canada, No:001100556)



இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் வித்திட்ட இச் சங்கம் இன்று பெரும் விருட்சமாக மிளிர்ந்திருக்கிறது. வெள்ளி விழாக்காணும் இந்த வேளை இந்த விருட்சமானது ஆழவேரூன்றி, ஓங்கி வளர்ந்து, அகலக் கிளைகள் விட்டு, நிறைந்த பொலிவுடன் நிழல் பரப்பி நிற்கின்றது.

எமது சங்கத்தின் நீண்ட பயணத்தினைப் பாராட்டி வாழ்த்த வேண்டியவர்களின் பட்டியல் மிக நீளமானது. குறிப்பாக இச்சங்கத்தை, நற்சிந்தனைத் துளிகளை உட்கொண்டு வித்திட்ட ஸ்தாபகர்களை முதற்கண் வாழ்த்த வேண்டும். தொடர்ந்து ஆண்டு தோறும் ஏற்று நகர்த்திய ஆளுமையுள்ள தலைமைத்துவங்களும், அதன் நிர்வாகசபை உறுப்பினர்களும், அயராது உழைத்த அங்கத்தவர்களும் வளர்ச்சிக்காக வாரி வழங்கிய வள்ளல்களும், இச் சங்கத்தால் ஈர்த்துக் கொள்ளப்பட்ட தொண்டர்களும் மற்றைய ஆர்வலர்களும் இவ் விருட்சத்தின் ஆணிவேரின் ஈரம் வற்றாமல் பாதுகாத்து வந்தவர்களும் நிச்சயம் பாராட்டி வாழ்த்தப்பட வேண்டியவர்கள்.

இதன் பயணப்பாதையில் மகாஜன மாதாவின் வளர்ச்சிக்காக பல கோணங்களில் கோடிக் கணக்கான பணத்தை வழங்கி வரும் எமது சங்கம் இங்கு வாழும் எம் சமூகத்தின் வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் 25 ஆண்டுகளாக இயங்கி வருவது எல்லோராலும் வாழ்த்தப்பட வேண்டியதொன்றாகும்.

இச்சங்கம் எல்லோரையும் இணைத்துப் பயணிப்பது இதன் இன்னொரு தனித்துவமாகும். இயல், இசை, நாடகத்துறையில் கல்விக்கான சோதனைகளில், விளையாட்டுப் போட்டிகளில், நிகழ்வுகள், போட்டிகள் நடத்தி தனக்கென்றொரு தனியிடத்தை முன்னிலைப்படுத்தி நிற்பதற்கு சகலரது ஒத்துழைப்பும் ஆதரவுமே காரணமாகிறது. இச்சந்தர்ப்பத்தில் அத்தனை பேரும் வாழ்த்தப்பட வேண்டியவர்கள்.

இச்சங்கம் மற்றோர்க்கு முன்மாதிரியாய், வழிகாட்டியாக வளரவேண்டும் என்று வாழ்த்தி வணங்குவோமாக. என்றும் எங்கள் ஆசிகள் சங்கத்தின் நிழலாகத் தொடரும்.

"வளர்க எமது சங்கம், வெல்லுக மகாஜன மாதா."

நா. சாந்திநாதன்
காப்பாளர்.
முன்னாள் தலைவர்

வெள்ளி விழா கொண்டாடும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா - 2014 25 வருடகாலக் காலடித் தடங்கள்...

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக் கிளையின் வெள்ளி விழாவை முன்னிட்டு கடந்த இருபத்தி ஐந்து ஆண்டு கால வரலாற்றை ஆவணப் படுத்தும் முகமாக இவ் ஆவணம் தயாரிக்கப் பட்டிருக்கின்றது. கடந்தகால தலைவர்கள், செயலாளர்கள் பொருளாளர்கள் மற்றும் நிர்வாகசபை அங்கத்தவர்கள், சங்கக் காப்பாளர்களின் உதவியுடன் எம்மால் முடிந்த அளவு தகவல்களைத் திரட்டி ஆவணப் படுத்தியிருக்கின்றோம். வாழ்க்கைப் பளுவின் மத்தியில் தாம் கற்ற பள்ளிக்கூடத்திற்காக அவர்கள் ஆற்றிய சேவையும், அர்ப்பணிப்பும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரப்பட வேண்டியது எமது கடமையாகும். அந்த வகையிலே 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான இருபத்தைந்து வருட காலப் பகுதியில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா கிளையின் செயற்பாடுகளை, ஆவணப்படுத்தலாம் என்ற நல்ல நோக்கத்தோடு எமக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களையும், ஆவணங்களையும் கொண்டு எம்மால் முடிந்தவரை தயாரித்திருக்கின்றோம். ஏதாவது தகவல்கள் தவறவிடப்பட்டிருந்தால், அவற்றை எமக்கு அறியத்தந்தால் இனிவரும் காலங்களில் அவற்றையும் நிவர்த்தி செய்ய எமக்கு வாய்ப்புண்டு. கடந்த காலங்களில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் மகாஜனக் கல்லூரிக்காகவும், இங்கே உள்ள பழைய மாணவர்களுக்காகவும் தம்மால் இயன்ற அளவு உதவிகளைச் செய்வதில் என்றும் பின் நின்றதில்லை. மகாஜனக் கல்லூரியின் அபிவிருத்தியையும், நூற்றாண்டு விழாவிற்கான ஏற்பாடுகளையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப, கடந்த காலங்களில் எமது நடவடிக்கைகள் அமைந்தன.

எமது சங்கத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

» கனடா வாழ் மகாஜனன்கள் தம் கல்லூரி மீது கொண்டிருக்கும் பற்றுக்கோடு, நன்றி உணர்வு, பெருமதிப்பு என்பனவற்றைத் தொடர்ந்து பேணி வளர்த்தற்கு ஆவன செய்தல்,

» மகாஜனன்களிடையே ஒற்றுமை உணர்வு, தோழமை உணர்வு, நட்புறவு ஆகியன வலுவடையும் வண்ணம் கல்வி, கலாச்சார நிகழ்ச்சிகள், ஒன்று கூடல்கள் இன்னும் இவை சார்ந்த பலவகை வைபவங்களை ஏற்பாடு செய்து நடத்துதல்,

» மகாஜனக் கல்லூரியின் பாரம்பரியங்கள், கல்வித்துறையில் அதன் மாண்புமிகு இலட்சியங்கள், என்பன நிலையுறும் வண்ணம் உரிய வேளைகளில் அவற்றிற்கான செயல் திட்டங்களை வகுத்தல், அவற்றை நடைமுறைப்படுத்தல்.

» மகாஜனக் கல்லூரியின் கல்வி, கட்டட வளர்ச்சிக்கு, புனருத்தாரண பணிகளுக்குத் தேவை ஏற்படும் பொழுது அல்லது வேண்டுகோள் விடுக்கின்ற பொழுது இயன்றளவு நிதியினை உரிய காலத்தில் திரட்டுதல்.

» கனடா வாழ் மகாஜனன்களின் பொதுநலன்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி ஒன்று கூடி கலந்துரையாடுவதற்குரிய வாய்ப்பினை வழங்குதல்,

» குறிப்பாக மகாஜனாவின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய பழம் பெரும் மகாஜனன்களையும், பொதுவாழ்க்கையில் கல்வி, சமய, கலாச்சாரத்துறையில் மேம்பாடும் கீர்த்தியும் பெற்ற புகழ்மிகு மகாஜனன்களைக் கௌரவித்தல்,

» கனடாவின் பல் கலாச்சார சமூக பொருளாதார அரசியல் வாழ்க்கையில் மகாஜனன்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடனும் நட்புறவுடனும் வாழ வகை செய்யும் பணிகள் செயற்பாடுகளில் முழுமையாகப் பங்குபற்றுதல்.

போன்ற செயற்பாடுகளை முக்கியமாகக் கொண்டு, அதற்கான நிதி சேமிப்பும், புதிய அங்கத்தவர்களை இணைக்கும் பணியும் மிகவும் ஆர்வத்தோடு முன்னெடுக்கப்பட்டன. எமது தன்னலமற்ற செயற்பாடுகளைப் புரிந்து கொண்ட பல பழைய மாணவர்கள் ஆயுட்கால உறுப்பினராக இணைந்து கொண்டனர். கல்லூரியைப் பொறுத்த வரையில் கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு தேவையான நிதி உதவிகளைச் செய்ய எமது பழைய மாணவர் சங்கம் தயங்கியதில்லை. எமது பழைய மாணவர்களும், எமது கல்லூரி நலன் விரும்பிகளும், நன்கொடை தந்தோரும் அதற்காக மனதாரப் பாராட்டப்படவேண்டும். குறிப்பாகக் கல்லூரியில் நடைபெறும் தாபகர் தின கொண்டாட்டம், விளையாட்டுப் போட்டி போன்றனவற்றிற்கு வருடாவருடம் எங்கள் சங்கத்தின் மூலம் நாங்கள் நிதி உதவி வழங்கி வருகின்றோம். இதைவிட மாணவர்களின் உயர் கல்விக்காக கல்லூரி பரிந்துரைக்கும் பத்து மாணவர்களுக்கு உயர் கல்விப் புலமைப் பரிசாக வருடாவருடம் நிதி உதவி செய்து வருகின்றோம். மகாஜனக் கல்லூரி மணவர்களுக்குத் தேவையான மகாஜனக் கல்லூரி கழுத்துப்பட்டக்கான செலவை நாமே ஏற்றுக் கொண்டோம். உள்நாட்டு யுத்தம் காரணமாக அழிந்த நிலையில் இருந்த கட்டிடங்களைத் திருத்துவதற்காக ஒரு தொகை நிதியை வழங்கிக்

கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர உதவியிருக்கிறோம். நவீன கல்வி முறை வசதிகளை எமது கல்லூரி மாணவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கல்லூரிக்கு கணனி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தோம். 35 கணனித் தொகுதிகளையும், அதற்கான வகுப்பறைகளையும் எமது செலவில் நவீன மயப்படுத்தி அதற்கான பராமரிப்பு செலவுகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றோம். எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவை இங்கே சிறப்பாகக் கொண்டாடியது மட்டுமல்ல, அதை ஆவணப்படுத்தும் முகமாக விசேட "மகாஜனன் நூற்றாண்டு மலர்" ஒன்றையும் வெளியிட்டிருந்தோம். அதேபோல, எமது கல்லூரியின் நுற்றாண்டை முன்னிட்டு கனடாவில் எமது சங்கத்தின் சார்பில் தபால் தலைகளையும் வெளியிட்டிருக்கின்றோம். இலக்கிய ஆர்வம் கொண்ட எமது அங்கத்தவர்கள் சிலர் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு தமது நூல்களை மகாஜன மாதாவிற்குச் சமர்ப்பணம் செய்திருந்தனர். எமது கல்லூரி வருடாவருடம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலும், திருக்கேதீஸ்வரத்திலும் திருவிழாக்கள் செய்வது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அம்முறையைப் பின்பற்றி பழைய மாணவர் சங்கத்தவர்களாகிய நாங்களும் இங்கே உள்ள றிச்மன்ஹில் ஆலயத்தில் வருடாவருடம் மதிய அன்னதானத்துடன் கூடிய திருவிழாவைத் தொடர்ந்தும் செய்து வருகின்றோம். இதேபோல இங்கு நடக்கும் ஏனைய மத நிகழ்ச்சிகளிலும் நாங்கள் பங்கு பற்றி வருகின்றோம். இதைவிட இங்கே உள்ள அடுத்த தலைமுறையினர் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடு மாணவர்களுக்கான கணித பொது அறிவுப் போட்டிகளை நடத்தி வருகின்றோம். இம்முறை எமது சங்கத்தின் 25 வருட நிறைவு வெள்ளி விழா கொண்டாட்டத்தைச் சிறப்பிக்கும் முகமாக எல்லா மாணவர்களும்பங்குபற்றக்கூடியதாகதமிழ்மொழி அறிவுப் போட்டியையும், இசைப்போட்டியையும் விசேடமாக நடத்தியிருந்தோம். இசைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான இசைப் பயிற்சிப் பட்டறைகளையும் இம்முறை நடத்தியிருக்கின்றோம். இதைவிட எமது அடுத்த தலைமுறையினருக்காகப் கல்வித்துறை சார்ந்த, விளையாட்டுத்துறை சார்ந்த பல பயிற்சிப் பட்டறைகளையும் இதுவரை நடத்தியிருக்கின்றோம். குறிப்பாக உயர் வகுப்புகளில் உள்ள மாணவர்கள், பல்கலைக்கழகம் புகவிருந்த மாணவர்களின் தேவை கருதி அவர்களுக்கான அறிவியல் பட்டறைகளை நடத்திப் பல பெற்றோர்களின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறோம். தொடர்ந்தும் இத்தகைய அறிவியற் பட்டறைகளை நடத்தி வருகின்றோம். எமது சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கும் முகமாக இரவு விருந்து நிகழ்ச்சிகளின் போது அவர்களது ஆக்கங்களைக் கண்காட்சிக்கு வைத்து அவர்களுக்குப் பரிசுகளும் கொடுத்து ஊக்குவித்திருக்கிறோம். கல்வித் துறையில் மட்டுமல்ல, வருடாவருடம் பழைய மாணவர்களின் குடும்பங்களின் ஒன்று கூடலும் அதனுடன் சேர்ந்த விளையாட்டுப் போட்டியையும் நடத்தி வருகின்றோம். 1993 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ் தமிழ் பாடசாலைகளுக்கான விளையாட்டு போட்டிகளில் பங்கு பற்றி எமது திறமைகளைப் பலதடவைவெளிப்படுத்திஇருக்கின்றோம். எமது சங்கத்தின் 10வது, 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக மகாஜனாச் சின்னம் பதித்த நினைவுக் கிண்ணங்களை வெளியிட்டிருக்கின்றோம். இதைவிட முத்தமிழ் விழாக்கள், விருது விழாக்கள், இராப்போசன, ஒனறுகூடல்கள், விருந்துபசாரங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவை மூலம் எமது அங்கத்தவர்களுக்கும், இளைய தலைமுறையினருக்கும் அவர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவருவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களை அளித்து வருகின்றோம். எமது பழைய மாணவர்களைப் பிரதம விருந்தினர்களாக அழைத்துக் கௌரவித்திருக்கின்றோம். எமது சமூக நன்மை கருதி இதுபோன்ற பல நல்ல முயற்சிகளில் எமது பழைய மாணவர்களும் அவர்களது குடும்பத்தினரும் தன்னார்வத் தொண்டர்களாக தொடர்ந்தும் இந்த மண்ணில் ஈடுபட்டு வருகின்றார்கள். எமது கடந்தகால செயற்பாடுகள் பற்றி இதுவரை வெளிவந்த "மகாஜனன்" மலரில் இருந்தும் எமக்குக் கிடைத்த ஏனைய ஆவணங்களில் இருந்தும் பெறப்பட்ட தகவல்கள் மட்டுமே இங்கே சுருக்கமாகத் தொகுத்துத் தருகின்றோம்.

ஆண்டு 1989 தொடக்கம் 2014 வரை...

1989 ஆம் ஆண்டு எமது மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவில் உதயமாகியது. "உனை நீ அறி" என்ற கல்லூரி வாசகத்திற்கேற்பக் கல்லூரியின் ஆசீர்வாதத்துடன் அதன் செயற் பாடுகள் இந்த மண்ணில் ஆரம்பமாகின. சுமார் 15 மகாஜன பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து பழைய மாணவர் சங்கம் அமைப்பது பற்றி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி வீட்டில் முதன் முதலாக ஆலோசித்தனர். அதன் பலனாக 29-10-1989 இல் முதலாவது ஒன்றுகூடலும், மதியபோசனமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன. அப்போது முதலாவது நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. முதன் முதலாக எமது பழைய மாணவர் சங்கத்தைக் கனடாவில் ஆரம்பித்து வைப்பதில் முன்னின்று உழைத்த முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எல்லோரும் இச்சந்தர்ப்பத்தில் எமது பாராட்டுக்குரியவர்கள். இந்த மண்ணில் எங்கெல்லாம் எமது பழைய மாணவர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் தேடிச் சென்று அவர்களைப் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்தவராக்கும் முயற்சி முதல் ஐந்து ஆண்டு காலத்தில் பெருமளவில் எடுக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் பல தடைகள், குறைகளை எதிர்நோக்கினாலும், அவற்றை எல்லாம் கடந்து, எமது கல்லூரியின் நலன் கருதியும், எமது பழைய மாணவர்களின் நலன் கருதியும் சங்கத்தின் செயற்பாடுகள் முக்கியமாக அமைய வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் சங்கம் திறமையாகச் செயற்பட ஆரம்பித்தது. இதன் காரணமாக பழைய மாணவர்கள் ஒன்று கூடும் நிகழ்வுகள் பல ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாகக் கலை விழாக்கள், இரவு விருந்துபசாரங்கள், பூங்காவில் ஒன்று கூடல்கள், கோயிற் திருவிழாக்கள்,

விளையாட்டுப் போட்டிகள், பயிற்சிப் பட்டறைகள், கணித,பொதுஅறிவு, தமிழ், இசைப் போட்டிகள் போன்றவையும் படிப்படியாக வருடா வருடம் இடம் பெறத் தொடங்கின. 1992-93 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 1410 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி என்றால் ஈழத்தின் எத்திசையிலும் தெரியாதவர்களே இருக்க முடியாது. கல்வி, விளையாட்டு, கலைத்துறை என எல்லாத் துறைகளிலும் வியத்தகு சாதனை படைத்து வியந்து நின்று மக்களைப் பேசவைத்த ஒரு கல்லூரி மகாஜனக் கல்லூரி. இதன் பெருமைகளை எழுத்தில் வடித்துவிட முடியாது. சாதனைகளுக்கு ஒரு சான்று மகாஜனக்கல்லூரி. 1993 ஆடித் திங்களில் எமது பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மோணிங்சைட் பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது. அன்று துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், போன்ற விளையாட்டுக்களுடன் மதிய உணவும், மாலை நேர தேனீர் உபசாரமுமாக நூற்றுக் கணக்கான பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து மகிழ்வுற்றிருந்தது பெருமைக்குரியது. ஐப்பசி மாதம் ஸ்காபரோ சேர்ஜோன் மக்டொனால்ட் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவில் பழைய மாணவர்களின் கலைப்படைப்புக்களே முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெற்றிருந்தன. அவர்களின் பிள்ளைகளே இதில் பங்கு பற்றியதும் மகிழ்ச்சிக்குரியது. அவ்வருடம் நடைபெற்ற இராப்போசன விருந்தில் பழைய மாணவர்கள் கூடியிருந்து மகிழ்வுற்றதும், இராப்போசன விருந்திற்கு பிரதம விருந்தினராக அமெரிக்காவில் இருந்து பழைய மாணவர் டாக்டர். மு. கணேசன் அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு. நா. சிவலிங்கம் அவர்களும் வருகை தந்து சிறப்பித்திருந்தனர். விருந்தின்போது பொருட்காட்சியும் இடம் பெற்றது. அத்துடன் கவிதை, கட்டுரை, சமய அறிவுப் போட்டிகளும் நடைபெற்றன. விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கல்லூரியில் கல்வி கற்றவர்கள் அனைவரும் ஒன்றுகூடி இணைந்து நின்று செயலாற்றி ஐந்து ஆண்டுகள் நிறைவாகி விட்ட இனிய வேளையில்தான் "மகாஜனன்-1994" என்ற முதலாவது மலர் உதயமாகி யாவரையும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது. எமது அருமருந்தன்ன மகாஜனன் என்ற குழந்தை 1994 இல்தான் அவதரித்து. "எம்மில் பலர் எமது கல்லூரியின் வாழ்க்கைக் காலத்தை மனதுள்ளே கார்த்திகைச் செடியின் கிழங்கு போல புதைத்து வைத்துள்ளனர். அது காலத்திற்குக் காலம் கிளர்ந்து எழுந்து அற்புதமான மலர்களைத் தருவது போல நம்மவர்களினதும் எண்ணக் கருவூலங்களின் புலப்பாடுகளை காவி வருகிறது எமது முதலாவது மகாஜனன்" என்று முதலாவது மலர் ஆசிரியர் தனது ஆசிரியர் குறிப்பில் இனிவரும் காலங்களில் எமது செயற்பாடுகளை ஆவணப்படுத்த இத்தகைய மலர்கள் ஏன் தேவை என்பதைக் குறிப்பிட்டிருப்பது இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். கடந்த ஐந்து ஆண்டு காலமாக முன்னால் அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் தலைமையிலும் வழிகாட்டலிலுமாக நல் நகர்வுகளை பழைய மாணவர்களின் உதவியுடன் செய்ய முடிந்தது எனவும் அந்த முதலாவது மலரில் நினைவு கூரப்பட்டுள்ளது. இதைவிட அமரர்களான மகாஜன சிற்பி அமரர் ஜெயரத்தினம், அமரர் திரு. மகாதேவன், அமரர் த. சண்முகசுந்தரம், ஆசிரியை அமரர் ரோகிணி இரத்தினவேல், ஆசிரியர் அமரர் வை. கந்தசாமி, கல்லூரிக் கீதம், கொடி வணக்கப் பாடல்களை எழுதிய புலவர் அமரர் நா. சிவபாதசுந்தரனார், ஆசிரியர் அமரர் திரு. கணபதிப்பிள்ளை, ஆசிரியர் அமரர் திரு. சி. சின்னத்தம்பி, உதைபந்தாட்ட வீரரான அமரர் இராமச்சந்திரன், கன்ரீன் பொறுப்பாளர் அமரர் திரு. க. சங்கரப்பிள்ளை ஆகியோர் பற்றியும் மலரில் நினைவு கூர்ந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. 1993-94 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 1470 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

நாங்கள் பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மண்ணில் இராணுவ நடவடிக்கைச் சீரழிவினால் எமது மகாஜனக் கல்லூரி இடம் பெயரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. முதலில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், அதன் பின் அளவெட்டி அருனோதயாக் கல்லூரியிலும், இணுவில் மத்திய கல்லூரியிலும் மாலை நேரப் பாடசாலையாக நிறைந்த அசௌரியங்களுடன் வகுப்புக்கள் நடைபெற்றன. இதை நிறைவுக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு மருதனாமடம் சந்திக்கு அருகே இருந்த 25 பரப்பு காணியில் கொட்டகைகள் அமைத்து 52 வகுப்பறைகளை உள்ளடக்கி காலை நேரப் பாடசாலையாக 14.02.1994 தொடக்கம் பாடசாலை இயங்கத் தொடங்கியது. இப்பெரும் கல்விப் பணிக்கு கனடா பழைய மாணவர் சங்கம் நிதி கொடுத்து அரும்பணி ஆற்றியிருக்கின்றது என்பதை அப்போது கல்லூரி அதிபராக இருந்த க. நாகராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அந்த காலகட்டத்தில் சுமார் 75 ஆசிரியர்களும், 1760 மாணவர்களும் கல்லூரியில் இருந்துள்ளனர், இதில் பெண்கள் தொகை 820 ஆக இருந்தது கவனத்தில் கொள்ளத்தக்கது.

மகாஜனன் (1995) இரண்டாவது மலர் வெளியிடப்பட்டது. இந்த மலர் மூலம் கனடிய மகாஜனன்களின் அரிய கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்திருந்தார்கள். காப்பாளராக திரு. எம். கார்த்திகேசு பணி புரிந்தார். 1994 ஆடித் திங்கள் 23 ஆம் திகதி வருடாந்தப் பொதுக்கூட்டம், ஒன்று கூடல், விளையாட்டுப் போட்டிகள், மோணிங்சைட் பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது. கோயிற் திருவிழாவில் இம்முறை பங்குபற்றவில்லை. முத்தமிழ் விழா ஐப்பசித் திங்கள் 8 ஆம் நாள் சேர் ஜோன் மைக்டொனால்ட் பாடசாலை அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் கவிஞர் கந்தவனம், அ.கேதீஸ்வரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இராப்போசன விருந்தில் டாக்டர் ஸ்ரீஸ்கந்தராசா, திரு. செல்வன், டாக்டர் ராஜ்குமார், திரு.ஆ. சிவபாதம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இன்னிசை விருந்தும் இடம் பெற்றது. பொருட்காட்சி, சமய நிகழ்வுகள், கவிதை கட்டுரை சமய அறிவு போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியன நடைபெற்றன. பாடசாலை மாணவர் தொகை 1816 ஆக உயர்ந்திருந்தது. 1993 ஆம்

ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு 101 மாணவர் தகுதி பெற்றிருந்தனர். பாடசாலைக் கட்டட நிதிக்காக நிதி அனுப்பி வைக்கப்பட்டது. அமரர்களாகிய அதிபர்.சு. சிவசுப்ரமணியம், கலாசேகரி தம்பித்துரை, விடுதிப் பொறுப்பாளராக இருந்த க. வல்லிபுரம், அமரர் சிவபாதம் ஆகியோர் நினைவு கூரப்பட்டனர்.

மகாஜனன் (1996) மூன்றாவது மலர் வெளிவந்தது. நாட்டுச் சூழ்நிலை காரணமாக மருதனாமடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்த கல்லூரி சாவகச்சேரி நோக்கி நகர்ந்தது. இவ்வாண்டும் காப்பாளராக திரு. எம். கார்த்திகேசு பணி புரிந்தார். 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் வருடாந்தப் பொதுக்கூட்டம், ஒன்றுகூடல், விளையாட்டுப் போட்டிகள் மோணிங்சைட் பூங்காவில் நடைபெற்றன. முத்தமிழ்விழா சேர் ஜோன் மக்டொனால்ட் பாடசாலை அரங்கில் நடைபெற்றது. இவ்வருடம் கனடா வாழ் மகாஜனன்களின் சமய கலை கல்வி கலாச்சாரம் விளையாட்டு ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக பல நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தார்கள். பழைய மாணவர்களின் பிள்ளைகளை ஊககுவிக்கும் முகமாக இராப்போசன விருந்தின் போது அவர்கள் பங்கு பற்றிய பொருட்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. இதில் மகாஜனன்களின் பிள்ளைகள் வரைதல், கோலம், கைப்பணி, தையல் வேலை, போன்ற துறைகளில் தமது ஆக்கங்களைப் படைத்தனர். பங்கு பற்றிய அனைவருக்கும் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தனர். பிங்கோ விளையாட்டும் இடம் பெற்றது. எமது இளம் சந்ததியினருக்கு தமிழ், சமய அறிவை வளர்க்கும் நோக்கத்தில் எழுத்து, பேச்சு, சமய அறிவுப் போட்டிகளை நடத்தி வெற்றியீட்டிய பிள்ளைகளுக்கு முத்தமிழ் விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. சமய நம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாக யூன் 9 ஆம் திகதி றிச்மன்ட் பிள்ளையார் கோயில் 12 ஆம் திருவிழா சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் சிறப்பு நிகழ்ச்சியாக பழைய மாணவர்களது பண்ணிசையும், பஜனையும், நாதஸ்வரமும், மாணவர்களின் புல்லாங்குழல் இசை விருந்தும் அமைந்தன. 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் இடம் பெற்ற சகல கலை நிகழ்வுகளும் மகாஜனன்களின் படைப்புகளாக இருந்தன. இவ் விழாவின் சிறப்பு அம்சமாக மணிவிழாக்கண்ட முன்னாள் அதிபர் திரு. பொன். கனகசபாபதி அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. மணிவிழாக்கண்ட முன்னாள் ஆசிரியர் எஸ். சந்திரசேகரி அவர்களுக்கு மலரில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. 1995 ஏப்ரல் மாதம் இராப்போசன விருந்தில் திரு ஆ. விமலச்சந்திரன், டாக்டர் கௌரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும் மோணிங்சைட் பூங்காவில் நடைபெற்றன. வருகை தந்த அனைவருக்கும் மதிய உணவு வழங்கப் பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முன்னால் விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. க. யோகரட்ணம் அவர்கள் தலைமையில் இயங்கும் யாழ் விளையாட்டுக் குழு நடத்திய துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் பங்கு கொண்டு பரிசுகளையும் பெற்றுக் கொண்டது. 1963 ஆண்டு அமரரான தம்பு ஆசிரியர், அமரர் பரமேஸ்வரநாதன், அமரர் பாக்கியம் இராசா ஆகியோர் மலரில் நினைவு கூரப்பட்டனர். இந்த மலரில் அமரர் பண்டிதர் நா. ஆறுமுகம் ஆசிரியர் பற்றிய குறிப்பும் அடங்கியிருந்தது. 1995-96 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 500 ரி.ஆர்.ஒ நிதிக்கு அனுப்பப்பட்டது.

மகாஜனன் (1997) நான்காவது மலர் வெளிவந்தது. எமது பாடசாலை தற்காலிகமாக மீண்டும் மருதனாமடத்தில் இயங்கத் தொடங்கி விட்டது. மீண்டும் பழையபடி அம்பனையில் இயங்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையோடு கல்லூரியின் நூறாவது ஆண்டு பூர்த்தி விழாவிற்காக இங்கு ஒரு நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. மகாஜனன் மலரில் அடுத்த தலைமுறையினரைக் கவனத்தில் கொண்டு, கூடியவரை தமிழில் கூடிய ஆக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, ஆங்கில மொழிக் கலப்பையும் தவிர்க்க வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டது. காப்பாளராக திரு. இ. சிவசோதி பணி புரிந்தார். இதுவரை காலமும் பாடசாலையின் வளர்ச்சியை மட்டும் அடி நோக்கமாகக் கொண்டு இயங்கிய எமது சங்கம் இவ்வருடம் கனடாவில் வசிக்கும் பழைய மாணவர்கள் அவர்களின் பிள்ளைகள் அவர்களது வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றத் தீர்மானித்தது. அந்த வகையில் 1996 ஆம் ஆண்டிற்கான இராப்போசன விருந்தும் பொதுக்கூட்டமும் யூன் மாதம் 22 ஆம் திகதி புனித கப்பிரியேல் பரிஸ் தேவாலய மண்டபத்தில் நடைபெற்றது. ஆகஸ்ட் மாதம் கோடைகால ஒன்றுகூடலையும், விளையாட்டுப் போட்டியையும், நடத்திப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. யாழ் விளையாட்டுக் குழுவால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் சங்கத்தின் சார்பாக உதைபந்தாட்ட, துடுப்பாட்ட அணிகள் எம்மால் பயிற்சி அளிக்கப்பட்டுப் போட்டிகளில் பங்கு பற்றின. விசேட பொதுக் கூட்டத்தை கூட்டி புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. றிச்மனட் பிள்ளையார் கோயில் 12 ஆம் திருவிழா 1997 மே மாதம் பகல் பூசையுடன் எமது சங்கத்தின் உபயத்தில் நடைபெற்றது. அன்று அன்னதானமும் வழங்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முத்தமிழ் விழாவினைச் சிறப்பாக நடத்தி கனடா வாழ் மகாஜனன்களின் கலை வளர்ச்சிக்காக ஆக்கமும் ஊக்கமும் அளித்து அவர்களின் கலைத்திறனை வளர்த்தெடுக்க உதவி செய்தோம். உப அதிபராக இருந்த அமரர் கே. கிருஷ்ணபிள்ளை, அமரர் தெ.து. தர்மராஜா, நாடகக் கவிஞர் அமரர் செ. கதிரேசபிள்ளை ஆகியோர் மலரில் நினைவு கூரப்பட்டனர். 1997-98 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 518 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

மகாஜனன் (1998) ஐந்தாவது மலர் வெளியிடப்பட்டது.

காப்பாளராக திரு. இ. சிவசோதி பணி புரிந்தார். மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டிலே முதல் முறையாக மகாஜனக் கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கி ஒரு சாதனை படைத்தது. வழமைபோல ஆவணி மாதம் நடைபெற்ற யாழ் பாடசாலைகளுக்கான துடுப்பாட்ட, உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியமையால் உதைபந்தாட்ட அணி வெற்றிக் கிண்ணத்தை எமக்கு ஈட்டித் தந்தது. யூன் மாதம் கோடைகால ஒன்றுகூடல், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்வருடமும் ஐப்பசி மாதம் வின்சன்ட் சார்ச்சில் கல்லூரிக் கலையரங்கில் முத்தமிழ் விழா சிறப்பாக நடத்தப்பட்டது. இவ்விழாவில் இடம் பெற்ற அனேகமான நிகழ்ச்சிகள் எம் பழைய மாணவர்கள் அவர்தம் பிள்ளைகளால் படைக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்றன. சமய வளர்ச்சி கருதி றிச்மன்ட் பிள்ளையார் ஆலயத்தில் 12 ஆம் திருவிழா பகல் பூசை எமது சங்கத்தின் உபயத்தில் நடத்தப்பட்டு அன்னதானமும் வழங்கப்பட்டது. கண்மணிக் கிளாக்கர் எனப்படும் எஸ் கே. தம்பி, செல்வி இராசையா, நடேசுக் கிளாக்கர், ரி.பி. பத்மநாதன், டெப்போ கிருஸ்ணமூர்த்தி, கன்ரீன் சங்கரப்பிள்ளை, இராசாக் குருக்கள் ஆகியோர் கல்லூரியில் ஆற்றிய சேவை பற்றிய குறிப்பும் இவ்வருட மலரில் இடம் பெற்றிருக்கின்றது. அமரர் பிரம்மஸ்ரீ ஐ. வைத்தியநாதக்குருக்கள் அவர்கள் மலரில் நினைவுகூரப்பட்டார். 1998-99 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 400 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

மகாஜனன் (1999) பத்தாவது ஆண்டு சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. 21 ஆம் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில் எம் முன்னே மகாஜனாவின் நூற்றாண்டு. எமது பாடசாலை தெல்லிப்பழைக்கு இடம் மாறும் வரை பொறுத்திருந்தாலும், எமது மாணவர்கள் அக் கல்வியில் சிறக்க, தங்கிப் படிக்க அந்தக் கொட்டகைகளைப் புதுப்பிக்க வறுமையில் சிக்கியுள்ள சிறார்களும் முயன்று முன்னேற, நாம் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசிக்கப்பட்டது. காப்பாளராக திரு. இ. சிவசோதி பணி புரிந்தார். 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வருடாந்த இராப்போசன விருந்து சென்ரானியல் பொழுது போக்கு மைய மண்டபத்தில் நடைபெற்றது. முன்னாள் ஆசிரியர்களான திரு திருமதி சுந்தரராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். யூலை மாதம் 1998 மோனிங்சைட் பூங்காவில் கோடைகால ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும் வருடாந்தக் கூட்டமும் நடைபெற்றது. மே மாதம் 1999 இல் றிச்மண்ட்ஹில் பிள்ளையார் கோயில் திருவிழா இடம் பெற்றது. ஏப்ரல் மாதம் 1999 இல் முத்தமிழ்விழா சேர் யோன் மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. மாணவருக்கான கட்டுரைப்போட்டி நடத்தப்பட்டுப் பரிசுகளும் வழங்கப்பட்டது. ஓவியக் கலைஞர் அமரர் சுந்தரமூர்த்தி ஆசிரியர் இம்மலரில் நினைவு கூரப்பட்டார். எமது சங்கத்தை ஆரம்பிப்பதற்காக சுமார் 15 பேர்வரையில் பங்கு பற்றிய முதலாவது சந்திப்பு முன்னாள் அதிபர் திரு. பொ.கனகசபாபதி அவர்கள் வீட்டில் நடைபெற்றதாக மலரில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. 1999-2000 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 625 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

மகாஜனன் (2000) மலர் வெளியிடப்பட்டது. மகாஜனன் மலர் மிகவும் சிறப்பாக புதிய தலைமுறையினரின் ஆக்கங்களைக் கொண்டு இளமை பூத்துக் குலுங்கும் மலராக வெளிவந்திருந்தது. எந்த மகாஜனத்தாய் எங்களுக்கு நல்லறிவையும், நற்பண்பையும் ஊட்டி வளர்த்தாளோ அந்தத்தாய் பழையபடி மருதனாமடத்தில் இருந்து சொந்த மண்ணான அம்பனையில் காலடி எடுத்து வைத்திருந்தாள். புலம் பெயர்ந்த மண்ணில் வாழும் நாங்கள்தான் கல்லூரியின் வளர்ச்சிக்கான எமது பங்களிப்பை முடிந்த அளவு செய்ய வேண்டும் என ஆலோசிக்கப்பட்டது. காப்பாளராகத் திரு. இ. சிவசோதி பணி புரிந்தார். புலம் பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர்கள் சங்கம் அமைத்து புகழ் பரப்பி வந்த மகாஜனன்கள் அவுஸ்ரேலியாவில் மெல்பேர்ன் நகரில் இன்னுமோர் சங்கம் ஆரம்பித்திருந்தார்கள். போர்ச் சூழ்நிலையால் இடம் பெயர்ந்து திரிந்த மகாஜனாவில் புனருத்தாரணத்திற்காக பல நிதி உதவிகளைப் பெற்றுத் தந்த மகாஜனாவின் மைந்தன் திரு. சு. ஸ்ரீபாஸ்கரனின் மறைவு ஒரு பேரிழப்பாகும். அமரர்களான திரு. ஆ. விமலச்சந்திரன், க. மணிமாறன், ஷர்மினி, ஆசிரியர்கள் திருமதி, இராசரத்தினம் திரு. வ. பொன்னையா, திருமதி. சு. பொன்னுத்துரை, சு.ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் ஆண்டு மலரில் நினைவுகூரப்பட்டனர். ஜெயரட்ணம் நினைவு மண்டபம் ஒரு மில்லயன் ரூபா செலவில் எச்.சி.ஆர். சி உதவியுடன் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது. அதே போல துரையப்பா நினைவு மண்டபத்திலும் திருத்த வேலைகள் நடைபெற்றன. மகாஜனக் கல்லூரி மணவர்களுக்காக நடத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்காக எமது சங்கம் 20,000 ரூபாவை அனுப்பி வைத்தது. செல்வன் சிவபாலன் செந்தில்ராஜன் என்ற மாணவ சாரணன் தென்னிந்தியாவில் நடந்த விழாவில் பங்கு பற்றுவதற்கான செலவை எமது சங்கம் ஏற்றுக் கொண்டது. யாழ் பாடசாலைகள் பழைய மாணவர் சங்கங்களால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட, துடுப்பாட்டப் போட்டிகளில் எமது சங்கம் பங்கு பற்றிப் பல வெற்றிகளை ஈட்டியது. 1999 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்தும் மலர் வெளியீடும் ஸ்காபரோ சென்ரானியல் பொழுது போக்கு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. பழைய மாணவரான திரு. ஏ. மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். விளையாட்டு வீரரான திரு. பி. பாலசிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சங்கத்தின் வருடாந்த பூங்கா ஒன்று கூடலும், ஆண்டுப் பொதுக் கூட்டமும் யூலை மாதம் 1999 சனிக்கிழமை மோனிங்சைட் பூங்காவில் நடைபெற்றது. 1999-2000 ஆண்டுக்கான செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. ஆயுட்கால அங்கத்தவர்

திட்டம் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டது. 2000-2001 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 2000 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது. டொலர் 1000 மருத்துவ நிதிக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது

மகாஜனன் (2001) மலர் வெளியிடப்பட்டது. தாயகத்தில் வசதிகள் அற்ற நிலையில் கல்விகற்கும் எமது உடன் பிறப்புகளுக்கு எங்களால் இயன்ற சகல உதவிகளையும் தயங்காது செய்திட வேண்டும் என்ற செய்தி மகாஜனன் மலர் மூலம் விடப்பட்டது. காப்பாளராக திரு. இ. சிவசோதி பணி புரிந்தார். 2001 ஆம் ஆண்டு யூன் மாதம் நடந்த கனடா பழைய மாணவர் சங்கத்தின முத்தமிழ் விழாவில் இசைக்கச்சேரி, நடனங்கள், விவாகரத்து என்ற நாடகம் போன்றவை இடம் பெற்றன. யூன் 2000 த்தில் இராப்போசன விருந்தும் மகாஜனன் மலர் வெளியீடும் ஸ்காபரோ சென்ரனியல் பொழுது போக்கு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகப் பழைய மாணவி வைத்தியகலாநிதி திருமதி சர்வலட்சுமி ஜெகமோகன் கலந்து கொண்டதாகவும், யூலை மாதம் 2000 இல் பூங்கா ஒன்றுகூடலும் ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெற்றதாகவும், யூன் மாதம் 2001 இல் சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரியில் முத்தமிழ் விழா நடைபெற்றதாகவும் ஆண்டு மலரில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. யூன் மாதம் 2001 இல் தாபகர் பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை நினைவாக றிச்மென்ட் பிள்ளையார் ஆலயத்தில் அபிஷேகமும் சிரமதானமும் சிறப்பாக நடைபெற்றது. ஒக்டோபர் மாதம் 2000 இல் நிதியுதவித் திரைப்படக் காட்சி ஒன்றும் இடம் பெற்றது. இந்தப் பணம் கல்லூரி தளபாட பற்றாக் குறையைப் போக்குவதற்குக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டது. ஆகஸ்ட் 2001 இல் நடைபெற்ற யாழ். பாடசாலைகளுக்கான ஒருநாள் விளையாட்டுப் போட்டியில் துடுப்பாட்டம், வலைப்பந்து, சீருடை அணிவகுப்பு ஆகியவற்றில் பங்கு பற்றி அணிவகுப்பில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தனர். ஐக்கிய அமெரிக்காவில் உள்ள பழைய மாணவர்கள் சிலர் எமது சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து கொண்டனர். ஆசிரியர் அமரர் சத்தியோசாதம் அவர்கள் ஆண்டு மலரில் நினைவு கூரப்பட்டார். 2002-2003 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 500 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

மகாஜனன் மலர் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக வெளிவரவில்லை. 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டுவரை வழமையான வருடாந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. யூலை மாதத்தில் மோணிங்சைட் பூங்கா ஒன்றுகூடல் தொடர்ந்தும் நடைபெற்றது. பழைய மாணவர்கள் பலர் தங்கள் குடும்பங்களுடன் வந்து கலந்து கொண்டனர். புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் முயற்சியும் இச் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஒன்று கூடலுடன் சேர்ந்த ஆண்டுப் பொதுக் கூட்டமும் தொடர்ந்து மூன்று வருடங்களும் நடைபெற்றன. யூன் மாதத்தில் சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரியில் முத்தமிழ் விழா மூன்று வருடங்களும் நடைபெற்றன. இவ்விழாவில் பழைய மாணவர்களால் தயாரித்து வழங்கப்பட்ட பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. யூன் மாதத்தில் தாபகர் பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை நினைவாக றிச்மென்ட் பிள்ளையார் ஆலயத்தில் அபிஷேகமும் மதிய அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றன. ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற யாழ். பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டியில் துடுப்பாட்டம், வலைப்பந்து, ஆகியவற்றில் சிறப்பாகப் பங்கு பற்றி பல வெற்றிகளை எமது மாணவர்கள் பெற்றிருந்தனர். 2004--05 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 1582 தாபகர் நினைவுக்காக கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

2005 ஆம் 2006 ஆம் ஆண்டுகளில் எமது சங்கத்தின் நலன் கருதியும் கல்லூரியின் வளர்ச்சி கருதியும் சில பணிகளை முன்னெடுத்துச் செயற்படுத்தினோம். சங்கம் ஆரம்பித்து 17 ஆண்டுகள் பூர்த்தியாகி இருந்த நிலையில் கல்லூரிக்கான சில பணிகளை முன்னெடுத்துச் செயற்படுத்த ஆலோசனைகள் மேற்கொண்டோம். பல ஆண்டுகளாகக் கல்லூரி இடம் பெயர்ந்து பல இடங்களில் இயங்கி வந்தமையால் நாமும் இங்கு பல பணிகளைச் செயற்படுத்துவதை இடை நிறுத்தி கல்லூரியின் வளர்ச்சிக்காக நிதி சேகரிக்கத் தொடங்கினோம். மீண்டும் கல்லூரி தனது இடத்தில் இயங்கத் தொடங்க நாமும் மீண்டும் எமது பணிகளைச் செய்யத் தொடங்கினோம். இதன் மூலம் மீண்டும் எங்கள் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல், இரவு விருந்து உபசாரம் போன்றவற்றைச் செய்துள்ளோம். ஆண்டு தோறும் றிச்மன்ட் பிள்ளயைார் கோயிலில் நடத்தும் பூசையை மிகவும் சிறப்பாக செய்தோம். கல்லூரியின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு கல்லூரியின் திறந்த வெளி அரங்கத்திற்கு வடக்குப் பக்கமாக இருந்த மூன்று வகுப்பறைகளை மீள் திருத்தம் செய்வதற்கு நிதி உதவி செய்தோம். அதேபோல வருடாந்த தாபகர் தினக் கொண்டாட்டத்திற்கான செலவுகளுக்கும் நிதி உதவி செய்தோம். சில ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்த இரவு விருந்தினை சிறப்பாக நடத்தியிருந்தோம். இதன் மூலம் அங்கத்தவர்கள் ஒன்று கூடச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதைத் தொடர்ந்து வருடாந்த ஒன்று கூடலும், நிர்வாக சபைக்குப் புதிய அங்கத்தவர்களின் தெரிவும் இடம் பெற்றன. சங்க அங்கத்தவர்கள் யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கம் நடத்திய போட்டிகளிலும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். 2006--07 ஆண்டு காலப்பகுதியில் டொலர் 652 கல்லூரிக்கு அனுப்பப்பட்டது.

எமது முன்னாள் அதிபர் திரு க. நாகராஜா அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தாயத்தில் அவர் அதிபராக பதவி வகித்த காலத்தில் இக்கட்டான சூழ்நிலையிலும் கல்லூரியை இடம் பெயர்ந்த இடங்களிலும் நடத்தியது பாரட்டுக்குரியது.

மகாஜனன் 2007 ஆம் ஆண்டு மலர் மீண்டும் வெளிவந்தது. பல காலமாக வெளிவராத மகாஜனன் மலரை புதிய கோணத்தில் இளம் தலை முறையினரின் ஆக்கங்களை மாத்திரம் உள்ளடக்கிய மலராக வெளியிட்டோம். 2010 ஆம் ஆண்டு நடைபெற இருந்த

100 ஆண்டு விழாவில் வெளியிட இருந்த சிறுவர் கவிதை நூலுக்கான ஆக்கங்களைக் கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைக்கும்படி ஆசிரியர் மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள் மகாஜனன் இதழ் 2007 வாயிலாகப் பழைய மாணவர்களிடம் கேட்டிருந்தார். வழமைபோல எங்கள் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல், நிர்வாகசபைத் தெரிவு, இரவு விருந்து போன்றவற்றைச் செய்துள்ளோம். இராப்போசன விருந்துபசாரத்தில் ஆங்கில ஆசிரியர் திரு. கந்தையாவின் மகன் யோகு கந்தையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அவ்விழாவில் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். 16-01-2007 இல் முதலாவது கணித பொது அறிவுப் போட்டி நடைபெற்றது. சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் பங்கு பற்றியிருந்தனர். மகாஜனக் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் இயக்குனராக திரு. வி. நந்தீஸ்வரர் தெரிவு செய்யப்பட்டார். ஆகஸ்ட் 11 ஆம் திகதி 2007 - 2008 க்கான பொதுக்கூட்டம் நடைபெற்றது. நூற்றாண்டு விழாவைக் கொண்டாட நிரந்தர உபகுழுக்களை அமைக்க பொதுச்சபை தீர்மானித்தது. ஆண்டு தோறும் நிச்மன்ட் பிள்ளையார் கோயிலில் நடத்தும் பூசையையும் அன்னதானத்தையும் மே மாதம் மிகவும் சிறப்பாக செய்தோம். முத்தமிழ் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பழைய மாணவர்களின் வாரிசுகள் இதில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். குறிப்பாக மாணவர்களுக்கான கணித, பொது அறிவு, தமிழ் மொழிப் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் கொடுத்துப் பாராட்டினோம். ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த மகாஜனன் இணையத் தளத்தைச் சிறப்பாகச் செயற்படுத்த ஒரு குழு அமைக்கப்பட்டது. எமது பழைய மாணவன் பேராசிரியர் என். சுண்முகலிங்கன் யாழ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைக்கப்பட்டது. மாணவர்களுக்கான கழுத்துப் பட்டி வாங்குவதற்கு 1981 ஆம் ஆண்டு கல்லூரியில் படித்த பழைய மாணவர்கள் நிதி உதவி வழங்கியிருந்தனர். கொழும்பு பல்கலைக் கழக பீடாதிபதி திரு. சந்திரசேகரம் அவர்களுக்கு இரவு விருந்தளித்துக் கௌரவித்தோம். மகாஜனன் மலரில் அமரர்களான திருமதி செல்வமலர் இரத்தினசிங்கம், சின்னதத்தமபி சிவமகாராசா ஆகியோர் நினைவு கூரப்பட்டனர். காப்பாளர் திரு. கார்த்திகேசு அவர்கள் நூற்றாண்டை முன்னிட்டு கனடாவில் ஒரு நினைவுச்சின்னம் அமைய வேண்டும் என முன்மொழிந்திருந்தார். இதற்கான ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. திரு. விநாயகமூர்த்தி அவர்களுக்கும் முன்னாள் ஆசிரியர் திரு. முருகையா அவர்களுக்கும் வெவ்வேறு தினங்களில் இரவு விருந்து கொடுத்துக் கௌரவித்திருந்தோம். மார்ச் மாதம் 2008 ஆம் ஆண்டு முத்தமிழ் விழா நடைபெற்றது. 2வது கணிதப் பொது அறிவுப் போட்டிக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. 10 மாணவர்களுக்கு புலமைப் பரிசும், கணனிக் கூடத்திற்குத் தேவையான உதவி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. யூன் 12 ஆம் திகதி அவுஸ்ரேலியாவில் இருந்து வருகை தந்த பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. சம்பந்தர் அவர்களுக்கும், நிர்வாகசபை அங்கத்தவர் ஞானகலைக்கும் விருந்துபசாரம் கொடுத்துக் கௌரவித்தோம். இதைவிட இக்கால கட்டத்தில் டாக்டர் தேவகுஞ்சரி, திரு. இரவீந்திரன், டாக்டர் நரேந்திரன், டாக்டர் இளங்கோ திரு. முருகானந்தன், சுபத்திரா, சுகுணவரதலட்சுமி ஆகியோரும் விருந்து கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியை திருமதி சிங்கராஜா அவர்களின் இசை பற்றிய நூல் வெளியீடும், ஹம்சத்வனியின் ஒலிவட்டும் வெளியிடப்பட்டது

2008 - 2010 வழமை போல வருடாந்த நிகழ்ச்சிகள் எல்லாம் தொடர்ந்தும் நடைபெற்றன. வழமைபோல எங்கள் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல், பொதுக்கூட்டம், நிர்வாகசபைத் தெரிவு, இரவு விருந்து போன்றவற்றைச் செய்துள்ளோம். ஆண்டு தோறும் நிச்மன்ட் பிள்ளையார் கோயிலில் நடத்தும் பூசையையும் அன்னதானத்தையும் மிகவும் சிறப்பாக செய்திருந்தோம். முத்தமிழ் விழா வழமைபோல மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் பழைய மாணவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் பங்கு பற்றிச் சிறப்பித்திருந்தனர். 2008 ஆம் நவம்பர் மாதம் 7 திகதி Celibration Banquet Hall இல் நடைபெற்ற இரவு விருந்தில் திரு. ஞனநாயகம் கலந்து சிறப்பித்தார்

தொடர்ந்து வந்த காலப்பகுதியில் இரு மலர்கள் வெளியிட்டோம். "மகாஜனன் 2009 (கனடா)" இரவு விருந்தில் வெளியிட்டுச் சிறப்பித்தோம். இரண்டாவது மலர் "சர்வதேச நூற்றாண்டு மலர் 2010" மலராக வெளிவந்தது. இம் மலரை "மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை" என்று குறிப்பிட்டு பொதுவான மலராக வெளியிட்டோம். அனைவருக்கும் பொதுமலராக இம் மலர் 400க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டிருந்தது. இம் மலரில் எமக்கு கிடைத்த அனைத்து விடயங்கள், தரவுகள், புகைப்படங்கள், உள்ளடக்கப்பட்டன. இம் மலர் 2010 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டுச் சிறப்பிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் டொலர் 1000 I.M.H.0 மருத்துவ நிதிக்காக வழங்கப்பட்டது.

மகாஜனாவின் சரித்திரத்தில் 2010 ஆம் ஆண்டு இன்னொரு மைல் கல்லாகும். மகாஜன அன்னை தன் நூற்றாண்டை நிறைவு செய்த ஒரு மகத்தான வரலாற்றுப்பதிவாக அமைந்திருந்தது. மகாஜனா எனும் பெரு விருட்சத்தினைப் பாதுகாப்பது எமது தார்மீகக் கடமை என்பதால், அதன் ஆணி வேருக்குப் பலமூட்ட நாம் புலம் பெயர்ந்து குடியேறிய நாடுகளில் எல்லாம் பல விழுதுகளை உருவாக்கியுள்ளோம். அதன் பலத்தை அதிகரிக்க வேண்டிய தேவையும் கட்டாயமும் தற்போது எமக்கு உள்ளது.

மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக அதிக அங்கத்தவர்களைக் கொண்ட விசேட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு இங்கு சிறப்பாக

விழாக்களை நடத்தி, மலர்கள் வெளியிட்டு சிறப்புச் செய்வதற்கு இரண்டு ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. கணித பொது அறிவுப் போட்டிகள் ரொரண்டோவிலும் மொன்றியலிலும் இரு மொழி மூலம் நடாத்தப்பட்டது. மேலும் அவுஸ்திரேலியா, கொழும்பு, மகாஜனக் கல்லூரியிலும் நடத்தப்பட்டது. மேலும் எமது கல்லூரியின் சூழலில் உள்ள யூனியன் கல்லூரி, ஸ்கந்தவரோதய கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், தந்தை செல்வா பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் இதில் பங்குபற்றியிருந்தனர். இங்கு நடந்த போட்டியில் முதல் மூன்று இடங்களைத் தமதாக்கிய மாணவர்களுக்குப் பதக்கங்கள், பத்திரங்கள் இவற்றுடன் பொருள் பரிசுகளும் அளிக்கப்பட்டன. இப்படியான போட்டி 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இங்கே நடாத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இக்காலத்தில் மூன்று முத்தமிழ் விழாக்கள் நடத்தப்பட்டன. இரு விழாக்கள் ரொரண்டோவிலும் ஒரு விழா மொன்றியலிலும் நடத்தப்பட்டது. ஒவ்வொரு விழாவிலும் எமது பழைய மாணவர்களின் நெறியாக்கத்தில் சிறந்த முறையில் பல நிகழ்ச்சிகள் அளிக்கப்பட்டன. இதன் மூலம் எம் பழைய மாணவர்களது கலையுணர்வுகள் ஆக்கத்திறன்கள் வெளிப்பட்டன. இவ்விழாவில் காணொளி மூலம் காட்டப்பட்ட "மகாஜனா 100 ஆண்டுகள்" என்ற வரலாற்றுச் சித்திரம் அனைவரின் பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

இளையோர் திறன் காட்சியும் நிகழ்ச்சியும் (நுண்கலை) இந்தக் காலத்தில் நடந்ததொரு முக்கியமான நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. இந்த நிகழ்ச்சி மூலம் மிக இளைய தலைமுறைகளின் ஆக்கத்திறனையும் கலைத்திறனையும் கண்டறியக்கூடியதாக அமைந்தது. நூற்றுக்கதிகமான மாணவர்கள் போட்டியில் பங்குபற்றினார்கள். இந்த நிகழ்ச்சி சங்கத்திற்குப் புதியதொரு வளர்ச்சித் திட்டத்தை முன்காட்டியது. பங்குபற்றியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நூற்றாண்டை முன்னிட்டு ஆண்டுதோறும் ரிச்மண்ட் பிள்ளையார் கோயிலில் நடத்தப்படும் பூசை, திருவிழா இம்முறை மிகச் சிறப்பாக நடந்தது. சொற்பொழிவுகளும் இடம் பெற்றன. கல்லூரி நூற்றாண்டை முன்னிட்டு இரவு விருந்துகள் மூன்று தடவைகள் இடம் பெற்றன. ஆசிரியர் கௌரவம், முத்திரை வெளியீடு போன்ற நிகழ்ச்சிகள் அப்போது இடம் பெற்றன. இரண்டாவது இரவு விருந்து பல கலை நிகழ்ச்சிகளுடன் "மகாஜனன் மலர் 2009" வெளியீட்டுடனும் நிறைவு பெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு அமேரிக்காவில் இருந்து பழைய மாணவர்கள் பலர் சிறப்பு விருந்தினர்களாக வருகைதந்திருந்தனர். மூனறாவது இரவு விருந்தின் போது 2வது எலிசபெத் மகாராணி அவர்களால் மிக உயர் கௌரவம் அளிக்கப்பட்ட மதிப்புக்குரிய சேர் சபாரத்தினம் அருள்குமரன் அவர்கள் வருகைதந்து சிறப்பித்தமை மிகவும் மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியதாக அமைந்தது. இந்த நிகழ்ச்சிக்கு எமது கல்லூரிச் சூழலில் அமைந்துள்ள கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளையும் விருந்தினர்களாக அழைத்திருந்தோம். இவ்விரவு விருந்தும் எமது இளம் தலைமுறையினரின் சிறப்பான கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவுபெற்றது.

வருடாந்த ஆண்டுப் பொதுக்கூட்டத்துடன் நடைபெறும் முக்கியமானதொரு நிகழ்ச்சியாக வருடாந்த விளையாட்டு நிகழ்ச்சி இருந்து வந்தாலும், இம்முறை இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாகப் பலவிதமான நிகழ்ச்சிகளை உள்ளடக்கி நடைபெற்றது. வெற்றிவீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் பொருள் பரிசுகளும் அளிக்கப்பட்டன. இதற்கான வெற்றிக் கிண்ணங்களை எமது சங்கத்தின் அப்போதய தலைவராக இருந்த திரு இ.ரவீந்திரன் ஆண்டு தோறும் அன்பளிப்புச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் பாடசாலைகள் சங்கம் நடத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளிலும் நாம் பங்குபற்றினோம். ஆண்டு தோறும் தாபகர் தினத் தேவைக்கான நிதியுதவியைத் தொடர்ந்து அளித்து வருகின்றோம். வருடாவருடம் 10 புலமைப் பரிசுக்கான நிதியைப் பெற்று அனுப்பி வருகின்றோம். இத்துடன் மிக முக்கியமான விடயம் கணனி வகுப்பறைகளை சீரமைக்கவும் , சகல கணனிகள் மற்றும் உபகரணங்களுக்கான செலவுகளுக்கும் ரூபா 2,600,000 நிதி அளிக்க முடிவுசெய்து முதல் பகுதியாக ஒரு தொகையை அனுப்பி வைத்தோம். மேலும் கல்லூரிக் கோவில் புனருத்தாரன வேலைக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி அளித்திருந்தோம். கல்லூரியில் நடந்த நூற்றாண்டு விழாவுக்குக் கல்லூரியின் அழைப்பை ஏற்று எமது சங்கத்தின் சார்பில் திரு. இ. இரவீந்திரன் திரு. சிவகௌரிபாலன் ஆகியோர் அங்கு சென்று கலந்து சிறப்பித்தனர். 2007 ஆம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் மகாஜனக்கல்லூரியின் நூற்றண்டு நினைவாக கனடாவில் நினைவுச் சின்னம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையை காப்பாளர் கார்த்திகேசு அவர்கள் பொதுக்கூட்டத்தில் முன் மொழிந்ததைத் தொடர்ந்து ஆர்வமுள்ள பல பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து திரு. வே. நந்தீஸ்வரர் தலைமையில் Mahajanan Investment Group. (MIG) என்ற நினைவுச் சின்னத்தை உருவாக்க கட்டடதில் முதலீடு செய்தனர்.

2010-2012 எமது அறிவையும் ஆற்றலையும் கவனத்தில் கொண்டு, தனிமனித வளர்ச்சிக்கு எம்மைப் பயிற்றுவித்த எமது மகாஜனக்கல்லூரியின் சிறப்புகளான, கல்வி, விளையாட்டு, மற்றும் இயல் இசை நாடகம் என்பவற்றை, புலம் பெயர் மண்ணிலும் கடந்த 25 வருடங்களாக நிலைப்படுத்தி வருகின்றோம். ஆலயங்களில் மகா உற்சவங்கள் நிறைவுபெற்ற பின்னரும் நித்திய பூஜைகளும் விடேஷ நிகழ்வுகளும் தவறாது நடைபெறுவதுபோல், மகாஜனன்கள் நூற்றாண்டு விழாக்கள் நிறைவுபெற்ற பின்னர், 2010 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற செயற்குழு தனது இரண்டு வருட செயலாற்றுக் காலத்தில் இங்கு பல நிகழ்ச்சிகளை ஒருங்கமைத்து நடத்தவும், எமது கல்லூரியின் நலன்புரி விடையங்களில் அக்கறை காட்டவும் தவறவில்லை. எமது சங்கத்தினால் பொறுப்பேற்று நடத்தப்படும் றிடச்மண்ட் ஹில் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் 12ஆம் நாள் பகல்

திருவிழா, இவ்விரு வருடங்களிலும் வழைமைபோல் சிறப்பாக நடைபெற்றது. இம்முறையும், வழைமைபோல் இங்குள்ள பல மகாஜனன்கள் தாமாக முன்வந்து இதற்குரிய நிதியுதவியை அளித்தனர். 2006 ஆம் ஆண்டு, காப்பாளர் திரு. வி. நந்தீஸ்வரர் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் நடைபெற்றுவரும் கணிதப் பொது அறிவுப்போட்டி இவ்விரு வருடங்களிலும் சிறப்பாக ரொறன்ரோ,மொன்றியல்,கொழும்புமற்றும்தெல்லிப்பழை ஆகிய இடங்களில் ஒரேநாளில் நடந்தேறியது. இதை ஒழுங்கு செய்து நடத்துவதற்கு எம்முடன் இணைந்து, மொன்றியலிலுள்ள மகாஜனன்கள பெரிதும் ஒத்துழைப்பு நல்கினர். காலத்திற்கேற்ப சில தழுவல்களுடன், இளையோரையும் உள்வாங்கி, இயல் இசை நாடகத்தை பல்சுவையுடன் சமர்ப்பித்தது, "மகாஜனாவின் முத்தமிழ் விழா". இவ்விழா, 2011 இல் ரொறன்ரோ மொன்றியல் ஆகிய இரு நகரங்களிலும், 2012 இல் இராப்போசனத்துடன் கூடிய ஒரு விழாவாக ரொறன்ரோ நகரிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது. வழமைபோல் இவ்விழாவில் கணித பொது அறிவுப் போட்டி வெற்றியாளர்களுக்கு விருதுகளும் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்."தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரிவார்" ஆனால் எமக்கு கிடைக்கும் நன்கொடைகளோ தினையளவல்ல, பனையளவு. இப்படி எதிர்பார்ப்பின்றி நிதியுதவிகளை அள்ளி வழங்கும் அனுசரணையாளர்களும் இவ்விழாவிலேயே கௌரவப்படுத்தப்பட்டனர். இந்நிதியுதவி கொண்டே எமது கல்லூரிக்கு நாம் தொடர்ந்தும் பணிகளை செய்ய முடிகிறது. இவ்விரு ஆண்டுகளிலும், Highcastle Public School திடலில் எமது கோடைகால ஒன்றுகூடல் விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் எல்லா வயதினருக்கும் விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று விருதுகளும் வழங்கப்பட்டது. தொடர்ந்து எமது சங்க ஆண்டுப் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. இக்காலகட்டத்தில், கொழும்பில் இயங்கிவரும் மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியத்தின் முன்னைநாள் தவைரும், மகாஜனக் கல்லூரியின் அபிவிருத்திக்கு தேவையான நிதியை பெற்றுக் கொடுப்பதிற்கு காரணகர்த்தாவாக இருந்தவருமான, நன்கொடையாளர் திரு. ரி. லங்காநேசன் அவர்களுக்கும், இந்தியாவில் இலக்கியவிருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மகாஜனன், எழுத்தாளர் திரு. குரு அரவிந்தன் அவர்களுக்கும் பாராட்டு விருந்துபசாரம் நடைபெற்றது. மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவாக, எமது சங்கத்தினால் பொறுப்பேற்று, புதிய கணனிகள் பொருத்தப்பட்டு சீரமைக்கப்பட்ட கல்லூரியின் கணனி ஆய்வுகூடம், எமது சங்கத் தலைவர் திரு. நா. சாந்திநாதன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் கல்லூரியில் பயிலும் பத்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உட்பட வேறு சில தேவைகள் கருதியும் எமது சங்கத்தினால் நிதியுதவி அளிக்கப்பட்டது.

2012-2013 ஆகஸ்ட் 11, 2012 அன்று, Highcastle Public School மைதானத்தில் நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில், ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட 17 அங்கத்தவர்கள் அடங்கிய எமது நிர்வாகசபையின் பொதுக்கூட்டம், செப்டம்பர் மாதம், இலக்கம் 25 Slan Avenue,Scarborough இலுள்ள MIG மனையில்நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 10 பொதுக்கூட்டங்களும், 6 சிறப்புக்கூட்டங்களும் நடைபெற்றன. நவம்பர் 18, 2013 அன்று 25 Slan Avenue இல் நடைபெற்ற இளையோர் கருத்துப் பரிமாறல் பட்டறை சிறப்பாக அமைந்தது. முக்கியமாக, பெற்றோர்கள் கூடிய ஆர்வம் காட்டியதுடன், மேலும் இதுபோன்ற பட்டறைகளை ஒழுங்கமைத்துத் தருமாறும் கேட்டுக்கொண்டனர். இதை எமது பட்டதாரி வழித்தோன்றல்கள் திறம்பட ஒழுங்கு செய்திருந்தனர்

January 06, 2013, அன்று Scarborough Conventional Center இல் நடைபெற்ற அமரர் தெ. து. ஜெயரத்தினம் அவர்களின் 100 ஆண்டு நினைவு இராப்போசன விருந்திற்கு ஐக்கிய அமெரிக்காவில் இருந்து தமது பாரியாருடன் வருகை தந்த எமது பழைய மாணவன் வைத்திய கலாநிதி திரு கந்தகுமார் கந்தையா அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்ததுடன், கல்லூரி வளர்ச்சிக்காக 5000 டொலர் அன்பளிப்புச் சொய்திருந்தார். அமரரின் நினைவுக்கட்டுரைகள் அடங்கிய "மகாஜனன்" மலர் வெளியிடப்பட்டது.

மகாஜன பழைய மாணவர்களின் பிள்ளைகளின் இசைவிருந்து ஒரு சிறப்பு அம்சமாக இடம் பெற்றிருந்தது.

